بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 9

இதழ் 22

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1445 -துல்கஅதா 12 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - ஹிஜ்ரத் 30 ★ 30 மே 2024

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ الَّذِیۡنَ اٰمَنُوۡا وَالَّذِیۡنَ هَادُوۡا وَالصّٰبِـُٔوۡنَ وَالنَّصٰرٰی مَنۡ اٰمَنَ بِاللّٰهِ وَالۡیَوۡمِ الۡاٰخِرِ وَعَمِلَ صَالِحًا فَلَا خَوۡفٌ عَلَیۡهِمۡ وَلَا هُمۡ یَحۡزَنُوۡنَ ۝۷۰

நம்பிக்கை கொண்டவர்கள், யூதர்கள். ஸாபிகள், கிறிஸ்தவர்கள் ஆகியவர்களுள் அல்லாஹ்விடத்தும் இறுதிநாளிடத்தும் உண்மையாகவே நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு எந்தப் பயமும் ஏற்படாது. அவர்கள் கவலையடையவுமாட்டார்கள். (அல்மாயிதா: 70)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இறைவன் புறமிருந்து அனுப்பப்படுபவர்கள் மற்றும் அல்லாஹ்வின் நேசர்களை எதிர்ப்பதும் அவர்களுக்கு துன்பமிழைப்பதும் ஒருபோதும் நல்ல கனிகளைத் தர முடியாது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

தனது பிள்ளைகளை நேசிப்பது போன்று ஒருவரை ஒரு நபர் நேசிக்கின்ற நிலையில், வேறொரு நபர் அந்த நபரின் நேசத்திற்குரியவரை மரணித்து விட வேண்டும் என்றும், அதே போன்று அவரது உள்ளத்தை புண்படுத்தும் விஷயங்களையும் மீண்டும், மீண்டும் பேசினால் மேலும் அவருக்கு துன்பம் கொடுத்தால் அந்த நபர் அவரிடம் எவ்வாறு மகிழ்ச்சி கொள்ள முடியும்? மேலும் தனது பிள்ளைக்கு எதிராக தீய துஆக்களை செய்யும் ஒருவர் மீதும் அல்லது வேதனையளிக்கும் பேச்சுக்களை பேசுகின்ற ஒருவர் மீதும் அந்தத் தந்தை எவ்வாறு அன்பு கொள்வார்? இதேபோன்று அல்லாஹ்வின் நேசர்களும் அத்ஃபாலுல்லாஹ் என்ற வடிவத்தைப் பெற்றிருக்கின்றனர். ஒரு நபர் அவர்களை எதிர்க்கின்றபோதும், அவர்களுக்கு துன்பமிழைப்பதற்கு முழு மூச்சாக ஈடுபட்டுவிடுகின்றபோதும் அல்லாஹ்வின் தன்மானம் பொங்கி எழுகின்றது. மேலும் இறை நேசர்களை எதிர்க்கின்றவர்கள் மீது அவனுடைய கோபம் பொங்கி எழுகின்றது. (இறை நேசரை எதிர்க்கின்ற அந்த நபர் எவ்வளவுதான் தொழக் கூடியவராகவும், நோன்பு நோற்பவராகவும் இருந்தாலும் சரியே!)

ஏனெனில், அவர்கள் இறைவனின் ஒரு நேசருக்கு துன்பமிழைக்க விரும்புகின்றனர். அந்நேரத்தில் அந்த நபரின் தொழுகையும் பயன்படுவதில்லை ; நோன்பும் பயனளிப்பதில்லை. ஏனெனில், தொழுகை மற்றும் நோன்பின் மூலமாக எந்த இறைவனை மகிழ்ச்சியடைச் செய்ய வேண்டுமோ அவனை மற்றொரு செயலால் அவர்கள் கோபமூட்டி விடுகின்றனர். பின்னர் இறை கோபம் நீங்கி விடாத வரை அவர்களுக்கு ரிஸா எனும் திருப்தியின் அந்தஸ்து எப்படி கிடைக்கும்? மேலும் அந்த அறிவிலி கோபத்திற்கான காரணிகளை அறியாதவராக இருக்கின்றார். இன்னும் கூறப்போனால் தனது தொழுகை மற்றும் நோன்பின் மீது அவர் ஆணவமும், பெருமையும் கொள்கின்றார். அதன் விளைவு என்னவாக இருக்கின்றது என்றால், எல்லாம் வல்ல இறைவனின் கோபம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. மேலும் அவனுடைய நெருக்கத்தைப் பெறுவதற்கு பகரமாக நாளுக்கு நாள் எல்லாம் வல்ல அல்லாஹ்விடமிருந்து விலகிக் கொண்டே செல்கின்றார். இறைவன் புறமிருந்து அனுப்பப்படுபவர்கள் மற்றும் அல்லாஹ்வின் நேசர்களை எதிர்ப்பதும் அவர்களுக்கு துன்பமிழைப்பதும் ஒருபோதும் நல்ல கனிகளைத் தர முடியாது. நான் அவர்களுக்கு தொல்லைகள் கொடுத்தும், துன்பமிழைத்தும் நிம்மதியடைந்து விடுவேன் என்று எந்த நபர் கருதுகின்றாரோ அவர் பெரும் தவறிழைக்கின்றார். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 314, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * *

## இறைவனின் அருளால் நபி பாவமற்றவராக இருக்கின்றார். அவ்வாறிருக்க اِغۡفِرۡ لِیۡ என்று அவர் கூறுவதன் பொருள் என்ன? நம்பிக்கையாளரின் பல்வேறு அந்தஸ்துகளின் அடிப்படையில் அதற்கு பல்வேறு பொருள்கள் இருக்கின்றன

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா இப்ராஹீம் வசனம் 42-ற்கு விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

நபியானவர் இறைவனின் அருளினால் பாவமற்றவராக இருக்கின்றார். பின்னர்

اِغۡفِرۡ لِیۡ

என்று நபி கூறுவதன் பொருள் என்ன? உண்மையில் இறைஞானமற்ற மனிதனின் பார்வை குறுகியதாக இருக்கின்றது. அவரது பார்வை மனிதர்கள் வரையே சென்றடைகின்றது. மேலும் மனிதர்கள் அளவிலேயே திருப்தி கொள்ளப்படுகின்றது. ஆனால், இறை ஞானியின் பார்வை மேலே செல்கின்றது. மேலும் உயர்ந்து கொண்டே செல்கின்றது. அல்லாஹ்விற்கு எதிரில் மனிதன் ஒரு பொருட்டே அல்ல என்பதை அவர் புரிந்து கொள்கின்றார். சூரியனுக்கு முன்னால் ஒரு துகளுக்கு என்ன அந்தஸ்து இருக்கின்றது. ஏனெனில், இறைவன் இறுதியில் அவனால் படைக்கப்பட்டவனே ஆவான். அவரது வாழ்வு கூட எல்லாம் வல்ல இறைவனால் அருளப்பட்டது ஆகும். நேர்வழியும் அவன் புறமிருந்தே வருகின்றது.

ஆக, நபி என்பவர் இறைஞானம் பெற்றவராக இருக்கின்றார். அவர் தனது இருப்பை பார்க்கின்றார். மேலும், நான் என்ன செய்கின்றனோ அதனை நான் செய்யவில்லை. மாறாக, இறைவனே அமல் செய்வதற்கு நற்பேறு வழங்குகின்றான் என்பதை அவர் அறிகின்றார். எனவே அவர் இவ்வாறு துஆ செய்கின்றார்: அல்லாஹ்வே! எனது இருப்பை அதிகம் அதிகமாக மறைவாக ஆக்கிவிடுவாயாக! மேலும், உனது இருப்பை அதிகம் அதிகமாக வெளிப்படுத்துவாயாக!

ஆக, இந்நிலையில் இக்ஃபிர்லீ என்பதற்கு பொருள் இவ்வாறாகும்; அதாவது, உனது திரையை என் மீது இடுவாயாக! அதாவது, எனது இருப்பை

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்....

## நபிமொழி

### உரிய சந்தர்ப்பத்தில் செல்வத்தை செலவிடுதல் மற்றும் பிறருக்கு கல்வி கற்றுக் கொடுத்தலின் சிறப்புகள்

(1409) ஹஸ்ரத் இப்னு மஸ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அன்னார் (ரலி) கூறினார்கள்: நான் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து இதனை செவியுற்றேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: பொறாமை கொள்ளுதல் கூடாது; ஆயினும் இரண்டு நபர்கள் மீது. அல்லாஹ் செல்வத்தை வழங்கி இருந்து, அதனை உரிய சந்தர்ப்பத்தில் செலவிடுவதற்கு நற்பேறும் பெற்ற நபர் மீது! மேலும் அல்லாஹ்வால் சரியான அறிவு வழங்கப் பெற்ற மனிதர்; அவர் அதன்படி தானும் செயல்பட்டு பிறருக்கும் கற்றுக் கொடுக்கின்றார்.

**ஸதகா மற்றும் ஸகாத்தை தூய செல்வத்திலிருந்து கொடுத்தல்**

(1410) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எந்த நபர் தனது தூய செல்வத்திலிருந்து ஒரு பேரீத்தம் பழத்திற்கு சமமான அளவைக் கூட ஸதகாவாக கொடுக்கின்றாரோ அல்லாஹ் தூய பொருளையே ஒப்புக் கொள்கின்றான். மேலும் அல்லாஹ் அந்த ஸதகாவை தனது வலக்கரத்தால் ஒப்புக் கொள்கின்றான். பின்னர் ஸதாகா கொடுத்தவருக்காக அதனை அதிகரிக்கின்றான். உங்களில் ஒருவர் தனது குதிரைக் குட்டியை வளர்ப்பதைப் போன்று அதன் நன்மையை அதிகரிக்கச் செய்கின்றான். எந்த அளவுக்கு என்றால் (தருமமாகிய) அது மலைக்கு சமமானதாக ஆகிவிடுகின்றது.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 3, கிதாபுஸ் ஸகாத், காதியான் பதிப்பு 2008-ம் ஆண்டு)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உஹது போர் மற்றும் ஹம்ரஉல் அஸது போரின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்விலிருந்து ஈமானை வலுவூட்டக் கூடிய சம்பவங்களைப் பற்றிய குறிப்புகள்**

எந்த இறைவனின் கரத்தில் என் உயிர் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! அவர்கள் மதீனாவின் மீது தாக்குதல் நடத்தினால் பின்னர் எப்படிப்பட்ட கற்களுக்கு அடையாளங்கள் இடப்பட்டுள்ளன என்றால் அவை மழையாகப் பொழிந்து அழிக்கப்படுவர் (அல்ஹதீஸ்)

நமது எத்தனை நபர்கள் ஷஹீதாகி இருக்கின்றனரோ அவர்கள் அனைவரையும் அல்லாஹ் சொர்க்கத்தில் ஒன்று கூட்டியுள்ளான். மேலும் அனைவரும் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்தார்கள்: இறைவா! நாங்கள் பின்விட்டு வந்தவர்களை கருத்தில் கொள்வாயாக! (அல்ஹதீஸ்)

அல்லாஹ் உலகத் தலைவர்களுக்கும் அறிவை வழங்குவானாக. மேலும் முஸ்லிம் சமுதாயத்திற்கும் புரிதலையும் அறிவையும் வழங்குவானாக. மேலும் அவர்கள் ஒன்றுபட்டு தங்களது எதிரியை சரியான முறையில் எதிர் கொள்வதற்கும் ஞானத்தைப் பெறுவதற்கும் அவர்களுக்கு அல்லாஹ் நற்பேறு வழங்குவானாக!

ஜமாஅத்தின் முரப்பியும் ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவின் முன்னாள் பேராசிரியருமான மவ்லானா குலாம் அஹ்மத் நஸீம் ஸாஹிப் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத் அமெரிக்காவின் முன்னாள் அமீர் ஸாஹிப் ஆகியோரின் மரணத்தையொட்டி அவர்களின் நற்குறிப்புகளும் ஜனாஸா காயிப் தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 ஏப்ரல் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஷஹாதத்** மாதம் **19 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

உஹது போர் சம்பவங்களின் தொடர்ச்சியில் சில சம்பவங்கள் எடுத்து வைக்கப்படுகின்றன. அதன் மூலமாக பெருமானார் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையின் அழகிய அம்சங்களை குறித்து இன்னும் அறிய முடிகிறது.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் மரணமடைந்தபோது அன்னார் மீது கடன் இருந்தது. நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்று, கடன் கொடுத்தவர்களிடம் அவர்கள் தமது கடனில் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுமாறு தாங்கள் புரிய வையுங்கள் என்று உதவி கோரினேன். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களிடம் இந்த விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். ஆயினும், கடன் கொடுத்தவர்கள் குறைக்கவில்லை. அப்போது, நீங்கள் சென்று உங்களுடைய பேரீத்தம் பழ வகைகளை தனித்தனியாக பிரித்து வையுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள். பல்வேறு வகையான பேரீத்தம் பழ வகைகள் இருந்தன. அவற்றை தனித்தனியாக குவியலாக வையுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அஜ்வா எனும் வகையை தனியாக வையுங்கள்; இஸ்கு பின் ஸைத் எனும் வகையை தனியாக பிரித்து வையுங்கள்; பிறகு எனக்கு தகவல் அளியுங்கள் என்றார்கள். ஆகவே நான் அவ்வாறே செய்து விட்டு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் அனுப்பி வைத்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். அன்னார் (ஸல்) பேரீத்தம் பழ குவியலின் மீதோ அல்லது அவற்றின் இடையிலோ அமர்ந்து கொண்டார்கள். அந்த மக்களுக்கு நிறுத்து கொடுங்கள் என்று என்னிடம் கூறினார்கள். ஆகவே நான் அந்த மக்களுக்கு நிறுத்து கொடுக்க ஆரம்பித்தேன். எந்த அளவுக்கு என்றால் அவர்களுடைய உரிமையை நான் முழுவதுமாக கொடுத்து விட்டேன். அவ்வாறிருந்தும், என்னுடைய பேரீத்தம் பழங்கள் எஞ்சி விட்டன. அவற்றுள் எந்த ஒரு குறைவும் ஏற்படாதது போன்று தெரிந்தது.

பெருமானார் (ஸல்) அவர்கள் உஹதுடைய ஷஹீதுகளுக்காக துஆ செய்தார்கள். இறைவா! உஹதுடைய ஷஹீதுகள் பின் விட்டுச் சென்றவர்களை நன்கு கவனிக்க கூடியவர்களை உருவாக்குவாயாக! என்று துஆ செய்தார்கள். இதனுடைய விளக்கத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களின் வயோதிக மற்றும் பார்வை குறையுள்ள தாயாரைப் பற்றி கூறுகிறார்கள். அவர்களைப் பற்றி முன்பும் கூறப்பட்டு விட்டது. அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் மீதுள்ள நேசத்தின் காரணமாக மதீனாவை விட்டு வெளியே வந்திருந்தார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த விபரம் கடந்த குத்பாவில் கூறப்பட்டு விட்டது. இந்த விவரத்தை எடுத்துரைத்த பிறகு அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் தமது சவாரியை நிறுத்தச் செய்து அந்த மூதாட்டியை பார்த்தார்கள். அந்த மூதாட்டியிடம் அவர்களின் மகனுடைய ஷஹாதத்துக்காக வருத்தம் தெரிவித்தார்கள். அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

இந்த சம்பவங்களை சிந்தித்துப் பாருங்கள். யாருக்கு துன்பம் ஏற்பட்டுள்ளதோ, அவருடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவு அதிகமாக உணர்வு இருந்தது என்று பாருங்கள்! பெருமானார் (ஸல்) அதற்கு பிறகு அந்த மூதாட்டியிடம், நீங்களும் மகிழ்ச்சி கொள்ளுங்கள்; யாருடைய உறவினர்கள் போரில் ஷஹீதாகி விட்டார்களோ அந்த அனைத்து சகோதரிகளுக்கும் நற்செய்தி கூறுங்கள். இன்று ஷஹீதான அனைவரையும் அல்லாஹ் சொர்க்கத்தில் ஒன்று சேர்த்து விட்டான். அவர்கள் அனைவரும் அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள். இறைவா! நாங்கள் பின்னால் விட்டு வந்தவர்களை கவனித்துக் கொள்வாயாக! என்று துஆ செய்தார்கள் எனக் கூறினார்கள். இதைக் கூறிய பிறகு, இறைவா! உஹதுடைய ஷஹீதுகள் பின் விட்டுச் சென்றவர்களை நன்கு கவனிக்கக் கூடியவர்களை உருவாக்குவாயாக! என்று பெருமானார் (ஸல்) அவர்களும் துஆ செய்தார்கள். அன்னார் (ஸல்) மதீனாவுக்குள் நுழைந்த முன்பே உஹதுடைய ஷஹீதுகள் பின் விட்டுச் சென்றவர்களுக்கு எவ்வாறு ஆறுதல் வழங்கினார்கள் என்பதும், அவர்களுடன் எவ்வாறு அனுதாபத்தை வெளிப்படுத்தினார்கள் என்பதும் இதிலிருந்து தெரிய வருகிறது.

ஏனெனில் அன்னார் (ஸல்) காயமடைந்து இருந்தார்கள். அன்னாருடைய அன்பிற்குரிய உறவினர்கள் ஷஹீதாகி இருந்தார்கள். அன்னாருடய அன்பிற்குரிய ஸஹாபிகள் மரணமடைந்து இருந்தார்கள். ஆனால், அன்னார் (ஸல்) எடுத்து வைத்த ஒவ்வோர் அடியிலும் மதீனத்து மக்களுக்கு ஆறுதல் வழங்கிக் கொண்டே சென்றார்கள். அன்னாருக்கு தமது துன்பத்தைப் பற்றி கடுகளவும் உணர்வு இருக்கவில்லை. இந்த அளவு துன்பம் இருக்கும்போது இந்த அளவு துக்கங்களும், துயரங்களும் இருக்கும்போது மற்றவர்களுடன் அனுதாபத்தை

வெளிப்படுத்திய எந்தவொரு நபரையும் நாம் காண முடியாது. இவ்வாறான நேரத்தில் மக்கள் பிறருடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது ஒருபுறம். பிறருடன் பேசக் கூட விரும்ப மாட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு ஷஹீதுடைய விதவைக்காக செய்த ஒரு துஆவை பற்றிய குறிப்பு காணக் கிடைக்கிறது. அந்த துஆ என்னவென்றால், இறைவன் உங்களுடைய கணவரை விட சிறப்பாக கவனித்துக் கொள்ளும் ஒருவரை ஏற்படுத்துவானாக என்று நான் அல்லாஹ்விடம் துஆ செய்கிறேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இதன் விவரத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பொறுமையை மிகவும் சோதிக்கக் கூடிய ஒரு போராக இது இருந்தது. அதற்கு முன்பு ஒருபோதும் அன்னார் (ஸல்) மீது கொலைத் தாக்குதல் நடத்தப்படவில்லையே. அன்னார் (ஸல்) மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அது மட்டுமின்றி, அன்னாருடைய பல் உடைந்தது மட்டுமின்றி, அன்னார் காயமடைந்தது மட்டுமின்றி அன்னார் (ஸல்) மயக்க நிலையில் இருக்கும்போது எதிரி அன்னாரை கடந்து சென்று அன்னாருடைய தோழர்களின் மேலே ஏறிச் சென்று அவர்களின் உடல்களை காலடியில் நசுக்கியவாறு கடந்து சென்றான். இது அன்னாருடைய வாழ்வில் நடந்த முதல் நிகழ்வாகும். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வாறு மேலான துணிவுடன், உயர்ந்த நல்லொழுக்கத்தின் முன்மாதிரியையும் நிலைநாட்டியவாறும், மக்களுடன் அனுதாபத்துடனும், ஆறுதலுடனும் நடந்து கொண்டார்கள் என்பதை நாம் பார்க்க முடிகிறது. அன்னார் (ஸல்) ஒழுக்கத்தில் எந்த அளவு மேலான இடத்தில் நிலை பெற்று இருந்தார்கள் என்பதும் இந்தப் போரினுடைய சூழ்நிலைகளில் இருந்தும் தெரிய வருகிறது. இந்தப் போரில் ஸஹாபிகளின் நிகரற்ற தியாகங்களும் தெரிய வருகிறது. அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

நான் எப்படிப்பட்ட காலகட்டத்தைக் குறித்து கூறுகிறேன் என்றால், போர் முடிந்த பிறகு அன்னார் (ஸல்) மதீனாவுக்கு திரும்பிச் சென்று கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) ஷஹீதாகிவிட்டார்கள் என்ற செய்தியை கேட்டு மிகவும் நிம்மதி இழந்து போய் இருந்த மதீனத்துப் பெண்கள் அன்னாருடைய வருகையை குறித்து செவியுற்று அன்னாரை வரவேற்பதற்காக மதீனாவுக்கு கொஞ்சம் வெளியே சென்று காத்திருந்தார்கள். அவர்களுள் பெருமானார் (ஸல்) அவர்களின் மனைவியினுடைய சகோதரி ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரலி)




அவர்களும் இருந்தார்கள். அவர்களுக்கு மிகவும் நெருக்கமான மூன்று உறவினர்கள் போரில் ஷஹீதாகி விட்டிருந்தார்கள்.

இங்கு தெளிவுபடுத்த விரும்புவதாவது, அன்வாருல் உலூமில் எழுதப்பட்டுள்ள சம்பவத்தில் அல்லது எழுதக் கூடியவர் அவ்வாறு எழுதி இருக்கலாம் அல்லது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களே பெயரை அவ்வாறு எடுத்துரைத்திருக்கலாம். அதில் கொஞ்சம் மறதி ஏற்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரலி) அவர்களோ பெருமானார் (ஸல்) அவர்களின் தூய துணைவி ஆவார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் மனைவியினுடைய சகோதரியின் பெயர் ஹஸ்ரத் ஹம்னா பின்த் ஜஹ்ஷ் ஆக இருந்தது. இவர்கள் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் மனைவி ஆவார்கள். எவ்வாறு இருப்பினும், எங்கெல்லாம் இந்த பெயரை எடுத்துரைப்பதில் தவறு நிகழ்ந்துள்ளதோ அங்கெல்லாம் அதை நான் சரி செய்து கொண்டே செல்வேன்.

பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களைப் பார்த்தபோது உங்களுடைய இறந்தவர்களுக்காக வருத்தப்படுங்கள் என்று கூறினார்கள். (இது அரபி மொழியினுடைய சொல் வழக்காகும். அதனுடைய பொருள் உங்களுடைய அன்பர் கொல்லப்பட்டு விட்டார் என்று நான் உங்களுக்கு செய்தி கூறுகிறேன் என்பதாகும்.)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எந்த இறந்தவருக்காக வருத்தப்படுவது என்று ஹம்னா பின்த் ஜஹ்ஷ் அவர்கள் கேட்டார்கள். உங்களுடைய மாமா ஹம்ஸா ஷஹீதாகி விட்டார்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். இதைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் ஸைனப் அல்லது ஹம்னா அவர்கள்,

إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

என்று கூறிவிட்டு அல்லாஹ் அவர்களின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக! அவர் எந்த அளவு நல்லமுறையில் இறந்துள்ளார் என்றார்கள். அதற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் உங்களுடைய இன்னொரு இறந்த நபருக்காக வருத்தப்படுவீராக! என்று கூறினார்கள். அப்போது , அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! யாருக்காக? என்று ஹம்னா (ரலி) அவர்கள் கேட்டார்கள். உங்களது சகோதரர் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் -ம் ஷஹீதாகி விட்டார்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்போது, மீண்டும்

إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

என்று கூறிவிட்டு அல்ஹம்துலில்லாஹ்! அவர்களோ மிகவும் நல்ல மரணம் அடைந்துள்ளார்கள் என்று கூறினார்கள். அன்னார் (ஸல்) மீண்டும் கூறினார்கள்: நீர் உங்களுடைய இன்னுமொரு இறந்தவருக்காக வருத்தப்படுவீராக! அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! யாருக்காக? என்று ஹம்னா (ரலி) அவர்கள், கேட்டார்கள். உங்களுடைய கணவரும் ஷஹீதாகி விட்டார்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். இதை கேட்டுவிட்டு ஹம்னா (ரலி) அவர்களுடைய கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. அந்தோ பரிதாபம்! என்று அவர்கள் கூறினார்கள்.

இதைக் கண்ட பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்களுக்கு தமது கணவருடன் எந்த அளவு ஆழமான தொடர்பு இருக்கின்றது என்று பாருங்கள்! ஹம்னா (ரலி) அவர்களிடம் அன்னாருடைய மாமா ஷஹீதாகி விட்டார்கள் என்று நான் செய்தி கூறியபோது, அன்னார் மீண்டும் إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ என்று கூறினார்கள். ஆனால், அன்னாரின் கணவர் ஷஹீதாகி விட்டார் என்று கூறியபோது ஒரு பெருமூச்சு விட்டு, அந்தோ பரிதாபம்! என்று கூறினார்கள். அவர்களால் தமது கண்ணீரை தடுத்து நிறுத்த முடியவில்லை; பதற்றம் அடைந்து விட்டார்கள்.

அன்னார் (ரலி) கூறுகிறார்கள்: பெண்கள் இவ்வாறான நேரத்தில் தமது அன்பிற்குரிய உறவினர்கள் மற்றும் இரத்த உறவினர்களை மறந்து விடுவார்கள். ஆனால் அவளை நேசிக்கக் கூடிய கணவர் நினைவில் இருப்பார். அதற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹம்னா அவர்களிடம், நீங்கள் உங்களுடைய கணவருடைய மரணச் செய்தியை கேட்டு விட்டு அந்தோ பரிதாபம்! என்று ஏன் கூறினீர்கள்? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு அவருடைய மகனுடைய நினைவு வந்து விட்டது; அவரை யார் கவனித்துக் கொள்வார்? என்று நினைத்தேன் என்றார்கள். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள், இறைவன் உமது கணவரை விட மிகச் சிறந்த முறையில் அவரை கவனித்துக் கொள்ளக் கூடிய நபரை உருவாக்குவானாக! என்று நான் அல்லாஹ்விடம் துஆ செய்கிறேன் என்றார்கள்.

ஆகவே, இந்த துஆவின் விளைவு எவ்வாறானதாக இருந்தது என்றால் ஹஸ்ரத் ஹம்னா (ரலி) அவர்களின் திருமணம் தல்ஹா (ரலி) அவர்களுடன் நிகழ்ந்தது. அவர்களுக்கு முஹம்மத் பின் தல்ஹா (ரலி) என்ற ஒரு மகன் பிறந்தார். ஆனால், வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்னவென்றால், ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹம்னா (ரலி) அவர்களின் முதல் குழந்தைகளுடன் எந்த அளவு நேசத்துடனும், பரிவுடனும் நடந்து கொண்டார்கள் என்றால் அந்த அளவு தமது மகன் முஹம்மது அவர்களுடன் நடந்து கொள்ளவில்லை. வேறொருவருடைய குழந்தைகளை இந்த அளவு நேசத்துடன் வளர்க்கக் கூடிய தல்ஹா (ரலி) அவர்களை எவ்வாறு கண்டாமோ அவ்வாறு வேறு எவரையும் நாங்கள் கண்டதில்லை என்று மக்கள் கூறினார்கள். இது பெருமானார் (ஸல்) அவர்களுடைய துஆக்களின் விளைவாக இருந்தது.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துக் கூறுகிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹம்னா பின்த் ஜஹ்ஷ் (ரலி) அவர்களிடம் அனுதாபத்தை வெளிப்படுத்தினார்கள். பிறகு கூறினார்கள்: ஒரு பெண்ணுக்கு தம்மை நேசிக்கக் கூடிய கணவருடன் எந்த அளவு ஆழமான தொடர்பு இருக்கிறது என்று பாருங்கள்!. இதன் மூலமாக அன்னார் (ஸல்) கூறவந்த கருத்து என்னவென்றால், ஆண்கள் பெண்களுடன் நல்ல முறையில் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும். இந்த பொதுவான பாடம் இதில் உள்ளது. சின்ன சின்ன விஷயங்களுக்காக பெண்களை அடிப்பது, துன்புறுத்துவது போன்றவற்றில் ஈடுபட்டு விடக் கூடாது. அடிப்பதற்கு எங்களுக்கு அனுமதி உள்ளது என்று சாக்குபோக்குகளை உருவாக்கக் கூடாது.

தற்காலத்திலும் இது நடக்கிறது. அவர்களுடன் நல்லமுறையில் நடந்து கொள்ள வேண்டும்.

கூறுகிறார்கள்: அவர்களின் மனைவிமார்கள் தமது அன்பர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்களை விட்டு விட்டு அவர்களிடத்தில் வந்து இருக்கும்போது,

அவர்களுக்கு கண்ணியம் வழங்கப்பட வேண்டும் என்பதே நீதியின் எதிர்பார்ப்பாக உள்ளது. அதை விட்டு விட்டு சின்ன சின்ன விஷயங்களுக்காக அவர்களுடன் சண்டை, சச்சரவை உருவாக்கக் கூடாது. பெருமானார் (ஸல்) அவர்கள் இதை கூறியதனால் ஒருபுறம் ஹம்னா பின்த் ஜஹ்ஷ் (ரலி) அவர்களுக்கு ஆறுதல் வழங்கி விட்டார்கள். இன்னொரு புறம், பெண்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று அன்னார் (ஸல்) வலியுறுத்தியும் விட்டார்கள். அன்னாருடைய ஒவ்வொரு கூற்றிலும் பாடம் உள்ளது. அதை மனிதன் கவனமாக கேட்க வேண்டும்; சிந்திக்க வேண்டும். அப்போதுதான் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய விஷயம் அந்த நபருக்காக கூறப்பட்டது மட்டுமின்றி பொதுவாக அனைவருக்காகவும் ஓர் அறிவுரையாக இருந்தது என்று தெரிய வரும்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களுடைய வாழ்வில் பார்க்கும்போது, பிறருடைய உணர்வுகளுக்கும், மன நிலைகளுக்கும் அன்னார் எந்த அளவு மதிப்பளித்து வந்தார்கள் என்ற அம்சத்தையும் நாம் பார்க்க முடிகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள்: அன்னார் மதீனாவில் நுழைந்தபோது, காயங்களின் காரணமாக மிகவும் களைப்படைந்து இருந்தார்கள். ஆகவே ஸஹாபிகள் அன்னாரை தாங்கிப் பிடித்து சவாரியில் இருந்து இறக்கினார்கள். மஹ்ரிப் தொழுகையின் நேரமாக இருந்தது. அன்னார் (ஸல்) தொழுது விட்டு வீட்டுக்கு சென்று விட்டார்கள். எந்த பெண்களுடைய உறவினர்கள் போரில் ஷஹீது ஆகி இருந்தார்களோ அவர்களைப் பற்றிய செய்தி வந்தடைந்த உடன் அப்பெண்கள் அழ ஆரம்பித்து விட்டார்கள். பெண்கள் அழும் குரலை கேட்டபோது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பம் நினைவுக்கு வந்தது. அன்னாருடைய கண்களும் கண்ணீரால் நிரம்பி விட்டன. மேலும் لٰكِنَّ حَمْزَةَ فَلَا بَوَاكِيَ لَهٗ என்று கூறினார்கள். பொருள்:

எம்முடைய தந்தையின் சகோதரரும், எமது பால்குடி சகோதரருமான ஹம்ஸாவும் ஷஹீதாக இருக்கின்றார்கள்; ஆனால் அவர்களுக்காக துக்கம் அனுசரிக்கக் கூடியவர் யாருமில்லையா?

பெருமானார் (ஸல்) அவர்களின் உணர்வுகளை முழுமையாக்கத் துடிப்பு கொண்டிருந்த ஸஹாபிகள், அன்னாருடைய ஏதேனும் சிறியதிலும் சிறிய உணர்வை கூட நாம் முழுமை செய்யாமல் விட்டு விடக் கூடாது என்று விரும்பிக் கொண்டிருந்த ஸஹாபிகள் இதைக் கேட்டபோது தங்களது வீட்டை நோக்கி ஓடினார்கள். தம் பெண்களிடம் சென்று, நீங்கள் உங்களுடைய அன்பர்களுக்காக அழுவதை நிறுத்துங்கள்; பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டுக்கு சென்று ஹம்ஸா (ரலி) அவர்களுக்காக துக்கம் அனுசரியுங்கள் என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் களைப்படைந்து வந்திருந்தார்கள்; ஆகவே அன்னார் (ஸல்) தூங்கி விட்டார்கள். இரவில் மூன்றில் ஒரு பகுதி கழிந்தபோது அவர்கள் தொழுகைக்காக அன்னாரை எழுப்பினார்கள். அன்னார் (ஸல்) எழுந்தபோது அந்நேரம் வரை பெண்கள் அன்னாருடைய வீட்டில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்காக ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பதை கண்டார்கள். இங்கு என்ன நடக்கிறது? என்று அன்னார்(ஸல்) கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! மதீனாவின் பெண்கள் ஹம்ஸா (ரலி) அவர்களின் மரணத்துக்காக அழுது கொண்டிருக்கின்றார்கள் என்று கூறப்பட்டது. அல்லாஹ் மதீனாவின் பெண்கள் மீது கருணை புரிவானாக! அவர்கள் என்னுடன் அனுதாபத்தை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். அன்ஸாரிப் பெண்கள் என்னுடன் அதிக நேசம் வைத்திருக்கிறார்கள் என்பது ஏற்கனவே எனக்கு தெரியும் என்று கூறிவிட்டு, அத்துடன் இவ்வாறு ஒப்பாரி வைப்பது அல்லாஹ்விடத்தில் விரும்பத் தகாத விஷயமாக இருக்கிறது என்று கூறினார்கள். அப்பொழுது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது எங்களது உணர்வுகள்; இது தணியாது என்று ஸஹாபிகள் கூறினார்கள். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அழுவதை விட்டு நான் தடுக்கவில்லை. பெண்கள் தங்களது முகத்தில் அடித்துக் கொள்ள வேண்டாம் என்றும், தங்களது முடிகளை இழுத்துக் கொண்டு அழ வேண்டாம் என்றும் கூறுங்கள்.

அவர்கள் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார்கள். முகத்தில் அடித்துக் கொண்டு அழுது கொண்டிருந்தார்கள்.

தமது முடியை இழுக்கவோ, முகத்தில் அடித்துக் கொண்டோ, ஆடைகளை கிழித்துக் கொண்டோ உருக்கத்தை ஏற்படுத்துவதற்காக அழ வேண்டாம்; இயல்பாகவே உருக்கத்துடன் அழுகை வருகிறது என்றால் அழுது கொள்ளட்டும்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இந்த விஷயங்களின் மூலமாக அன்னாருடைய ஒழுக்கத்தின் நிலையை பற்றி அறிய முடிகிறது. அன்னார் காயமடைந்திருந்த போதிலும், துன்பத்தில் இருந்தபோதிலும் பிறருடைய உணர்வுகளை எந்த அளவு மதித்தார்கள் என்பது தெரிய வருகிறது.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை பின்வரும் கண்ணோட்டத்திலும் எடுத்துக் கூறுகிறார்கள்: மதீனத்து பெண்கள் தங்களுடைய இறந்தவர்களுக்காக ஒப்பாரி வைத்து, துக்கம் அனுசரிப்பதை பெருமானார் (ஸல்) அவர்கள் கண்டபோது எங்களுக்கு இங்கு யாரும் இல்லையே! என்று முஹாஜிர்களும், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் உறவினர்களும் கருதக் கூடாது என்பதற்காக அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தவாறு, இன்று ஹம்ஸாவுக்காக அழக்கூடியவர் யாருமில்லையா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். பிறகு மதீனாவின் பெண்கள் ஹம்ஸா (ரலி) அவர்களுக்காக துக்கம் அனுசரித்தபோது இவ்வாறு துக்கம் அனுசரிப்பது ஆகுமானது அல்ல என்று அன்னார் (ஸல்) தடுத்தார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்காக நிச்சயமாக துக்கம் அனுசரிக்க வேண்டும் என்பது அன்னாருடைய சிந்தனையாக இருந்தது என்றால் பிறகு அன்னார் (ஸல்) அதைத் தடுத்திருக்க மாட்டார்கள் என்பது இந்த சம்பவத்திலிருந்து தெரிய வருகிறது. ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மரணத்திற்காக யாரும் அழாமல் இருப்பதைக் கண்டு அன்னார் (ஸல்) வருத்தத்தை வெளிப்படுத்தினார்கள் என்றால் அந்த நேரத்தில் அதுவும் கூட ஊக்கப்படுத்த வேண்டும் என்ற உணர்வில் தான் அன்னார் (ஸல்) அவ்வாறு செய்தார்கள். ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்களை அழுவதிலிருந்து தடுக்கவும் செய்தார்கள்; அத்துடன் அவர்கள் தன் மீது அனுதாபத்தை வெளிப்படுத்தினார்கள் என்றும் அன்னார் (ஸல்) கூறினார்கள். அன்ஸாரிகளுக்கு என்னுடன் அதிக அனுதாபம் இருப்பது எனக்கு ஏற்கனவே தெரியும் என்றும் அன்னார்(ஸல்) கூறினார்கள். அன்னார் (ஸல்) கூறியதன் பொருள் என்னவாக இருந்தது என்றால், அவர்கள் அழுவதை தடுப்பதைக் கண்டு அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதே ஆகும். அன்னார்(ஸல்) தடுக்கவும் செய்தார்கள்; அவர்களுக்கு நன்றியும் செலுத்தினார்கள். இப்படிப்பட்ட இக்கட்டான நேரத்தில் அன்னார் (ஸல்) மேற்கொண்ட விதம் எவ்வளவு மகத்துவமிக்கதாகவும், மகிமை வாய்ந்த வழிமுறையாகவும் நமக்கு தென்படுகிறது! ஏனெனில், நண்பர்களும் நெருங்கிய உறவினர்களும் கொல்லப்பட்டிருந்த நேரத்தில் அந்த நபரும் காயம் அடைந்து இருக்கும்போது, அண்மையிலும், வருங்காலத்திலும் அபாயத்தின் அறிகுறிகள் இருக்கும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய முன்மாதிரியை போன்று எந்த ஒரு நபரும் இவ்வாறான முன்மாதிரியை நிலைநாட்ட முடியாது!

எவர்களுடைய வாள்கள் உஹது போரில் உரிமையை நிறைவேற்றினவோ அந்த ஸஹாபிகளை பற்றிய குறிப்பு வரலாற்று நூல்களில் இவ்வாறு காணக் கிடைக்கின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் வீட்டில் நுழைந்துபோது தம்முடைய மகள் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் வாளைக் கொடுத்தவாறு اِغْسِلِيْ عَنْ هٰذَا دَمَهٗ يَا بُنَيَّةُ فَوَاللّٰهِ لَقَدْ صَدَقَنِيْ الْيَوْمَ என்று கூறினார்கள்.

பொருள்: என் அன்பிற்குரிய மகளே! இந்த வாளில் இருக்கக் கூடிய ரத்தத்தை சுத்தம் செய்வீராக! அல்லாஹ்வின் மீது ஆணையாக! இன்று இந்த வாள் உரிமையை செலுத்தியது.

பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் தம் வாளை ஒப்படைத்தவாறு அந்த வாளில் இருக்கக் கூடிய ரத்தத்தையும் கழுவி விடுங்கள் என்று கூறினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் நாவிலிருந்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய அதே சொற்கள் வெளிப்பட்டன. அல்லாஹ்வின் மீது ஆணையாக! இன்று இந்த வாள் சிறப்பாக செயல்பட்டது என்று கூறினார்கள். இதைக் கேட்டு விட்டு பெருமானார் (ஸல்) அவர்கள்

لَئِنْ كُنْتَ صَدَقْتَ الْيَوْمَ الْقِتَالَ
لَقَدْ صَدَقَ مَعَكَ سَهْلُ بْنُ حُنَيْفٍ
وَاَبُوْ دُجَانَةَ

என்று கூறினார்கள்.

பொருள்: இன்று நீங்கள் போரில் சிறப்பாக செயல்பட்டீர்கள் என்றால் உங்களைப் போன்று ஸஹல் பின் ஹுனைஃப் அவர்களும், அபூதுஜான (ரலி)

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

அவர்களும் நன்கு வீரத்தை வெளிப்படுத்தினார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: (ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பார்த்து) நீங்கள் வாள் வித்தையில் நிறைவாக செயல்பட்டீர்கள் என்றால் ஸஹல் பின் ஹுனைஃப் அவர்களும், அபூதுஜானா (ரலி) அவர்களும், ஆஸிஃப் பின் ஸாபித் (ரலி) அவர்களும் ஹாரிஸ் பின் சிம்மஹ் (ரலி) அவர்களும் நன்கு வீரத்தை வெளிப்படுத்தினார்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

வரலாற்றில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் உஹது போரில் இருந்து திரும்பி வந்த பிறகு ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் தம் வாளைக் கொடுத்து இதை கழுவி விடுங்கள்; இன்று இந்த வாள் பெரும் பணியாற்றியது என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் விஷயத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அலீயே! உங்களுடைய வாள் மட்டும் இன்றி உங்களுடைய சகோதரர்களாகிய பலருடைய வாள்களும் வீரத்தை வெளிப்படுத்தின என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஆறு, ஏழு ஸஹாபிகளின் பெயரை எடுத்துக் கூறி அவர்களுடைய வாள்கள் உங்களுடைய வாளை விட எந்த விதத்திலும் குறைந்தது அல்ல என்று கூறினார்கள்.

சுருக்கம் என்னவென்றால், அன்னாருடைய மருமகன் கூறக் கூடிய விஷயத்தால் மற்ற ஸஹாபிகளின் உள்ளங்கள் புண்பட்டு விடுவதை அன்னாரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அன்னாருடைய பார்வை சின்ன சின்ன விஷயங்கள் மீதும் இருந்தன என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. உஹது போர் சம்பவம் நிரந்தரமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய மிகப் பெரிய சம்பவமாக இருந்தது. இந்த சம்பவத்திற்குப் பிறகு எதிரி இனிமேல் துணிந்து விடுவான் என்றும், இனிமேல் என்ன நடக்குமோ தெரியவில்லை என்றும் மக்கள் கடும் கவலையில் இருந்தார்கள். மனிதன் இப்படிப்பட்ட நேரங்களில் சின்ன, சின்ன விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்துவது கிடையாது. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களோ ஒவ்வொரு நபருடனும் அனுதாபத்தை வெளிப்படுத்தினார்கள். அனைவரையும் ஊக்கப்படுத்தினார்கள்.

உஹது போரின் சம்பவங்கள் இங்கு நிறைவு பெறுகின்றன. இதற்கு பிறகு இன்னொரு போர் நடைபெற்றது. அதனுடைய பெயர் ஹம்ரா அல் அஸத் என்பதாகும். இது ஹிஜ்ரீ 3-ம் ஆண்டு ஷவ்வால் மாதம் நிகழ்ந்தது. அதைப் பற்றி நான் கூறுகின்றேன். இந்தப் போர் உண்மையில் உஹது போரின் ஒரு பகுதியாகவும், எஞ்சிய பகுதியாகவும் இருந்தது. ஹம்ரா அல் அஸத் போரில் இருந்து கிடைத்த விளைவுகளின் அடிப்படையில் உஹது போர் உண்மையான பொருளில் முஸ்லிம்களுடைய வெற்றியாகவே கருதப்படுகிறது. மதீனாவில் இருந்து ஸுல் ஹலீஃபா செல்லும் வழியில் இடப்பக்கத்தில் உள்ள பகுதியாகும். மதீனாவில் இருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள இடமாகும்.

ஹம்ரா அல் அஸத் போருக்கான காரணம் என்னவாக இருந்தது? என்பதைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. உஹதுப் போர் முடிவடைந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் மாலை நேரத்தில் மதீனாவுக்கு திரும்பினார்கள். கடுமையாக காயமுற்றிருந்த போதிலும் ஸஹாபிகளின் ஆதரவுடன் பள்ளிவாசலுக்கு சென்று மக்ரிப் தொழுகையை தொழுதார்கள். இஷா தொழுகைக்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தம் வீட்டுக்கு திரும்பிச் சென்று விட்டார்கள்தான். ஆனால், அன்னார் (ஸல்) முழு இரவையும் விழித்திருந்தவாறு கழித்தார்கள் என்பது தெரிய வருகிறது. ஏனெனில், அபூஸுஃப்யான் தமது படையுடன் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான திட்டத்தை வகுக்கலாம் என்று அன்னார் (ஸல்) எச்சரிக்கை உணர்வு கொண்டிருந்தார்கள். அதன் காரணமாக மதீனாவில் ஒருவிதமான அவசர நிலை காணப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டுக்கு வெளியிலும் தொடர்ச்சியாக காவல் பணி இருந்தது. அபூஸுஃப்யான் மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்க ஆயத்தம் மேற்கொள்கிறாரா? அபூஸுஃப்யானின் நோக்கம் என்னவாக உள்ளது? என்பதையும் அன்னார் (ஸல்) அறிந்து வரச் செய்திருந்தார்கள். ஆரம்ப அறிக்கைகளில் அபூஸுஃப்யான் மிக விரைவாக தமது படையுடன் மக்காவை நோக்கி சென்று கொண்டிருப்பதாக அறிக்கைகள் கிடைத்து வந்தாலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கவனமற்று இருந்திருக்கவில்லை. இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்களின் எச்சரிக்கை உணர்வு சரியானது என்று நிரூபணமானது. இரவு முழுமையாக கழிந்திருக்கவில்லை. அபூஸுஃப்யான் தமது படையுடன் மதீனாவின் மீது தாக்குதல் நடத்த வருவதற்கு ஆயத்தம் மேற்கொண்டு இருப்பதாக அன்னாருக்கு தகவல் கிடைத்தது.

என்ன நிகழ்ந்தது? என்றால், இணை வைப்பாளர்கள் உஹது களத்தை விட்டு திரும்பிச் செல்லும்போது, வழியில் அவர்களை சந்திக்கின்ற மக்கள் அனைவரும் போரை பற்றிய செய்தியை அறிந்து கொண்டு இணை வைப்பாளர்களை பரிகாசம் செய்யும் தொனியில், நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களை கொலை செய்யவும் இல்லை ; முஸ்லிம் பெண்களை உடன் அழைத்து வரவும் இல்லை ; அவர்களை சிறை பிடித்துக் கொண்டு வரவும் இல்லை ; எந்தவொரு போர் செல்வத்தையும் கொண்டு வரவுமில்லை. அப்படி இருக்கும்போது எந்த வெற்றியைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்? என்று பரிகாசம் செய்யும் தொணியில் பேசினார்கள். இந்த பரிகாசங்களைக் கேட்டவாறே இந்தப் படை மதீனாவில் இருந்து 74 கிலோமீட்டர் தூரம் வரை சென்றடைந்தது அல்லது சிலரை பொறுத்தவரை 55 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ரவ்ஹா என்ற இடத்தை சென்றடைந்திருந்தது. அங்கு அவர்கள் முகாமிட்டார்கள்; தமக்குள் அவர்கள் விவாதிக்க ஆரம்பித்தார்கள். மக்கள் கூறக்கூடிய விஷயம் சரிதானே! நம்மிடத்தில் எந்தக் கைதியும் இல்லை. எந்த போர் செல்வமும் இல்லை. ஆகவே இது மிக மோசமான விஷயம் ஆகும். நாம் திரும்பிச் செல்ல வேண்டும்.மதீனா மீது தாக்குதல் தொடுக்க வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள். ஆனால், அந்தப் படையில் ஸஃப்வான் பின் உமய்யா என்ற ஒரு தலைவர் நீங்கள் இவ்வாறு ஒருபோதும் செய்யக் கூடாது. இந்நேரத்தில் மதீனாவின் மீது தாக்குதல் நடத்தலாம் என்று நினைத்துக் கூட பார்க்க வேண்டாம். இல்லையெனில் நீங்கள் மிக மோசமாக தோல்வியை காண்பீர்கள் என்று ஆலோசனை கொடுத்தார். ஆனால், அபூஸுஃப்யான் மற்றும் அவருடைய பிற தோழர்களுள் சில நபர்கள் நாம் மதீனாவின் மீது தாக்குதல் நடத்த வேண்டும்; இல்லை என்றால் எந்த முகத்தைக் கொண்டு நாம் மக்காவுக்கு செல்வோம் என்று தீர்மானம் எடுத்தனர். இங்கு அபூஸுஃப்யான் தமது படையினருடன் இந்த ஆலோசனை செய்து கொண்டிருக்கும் போது, அங்கு மதீனாவில் ஃபஜ்ர் தொழுகைக்காக ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பாங்கு கொடுத்து விட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் வெளியே வருவதற்காக காத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அவ்ஃப் முஸனீ (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை தேடியவாறு அங்கு வந்தார்கள். அன்னார் வெளியே வந்தபோது அவர்கள் வெளியே நின்று கொண்டே பெருமானார் (ஸல்)அவர்களிடம் செய்தியை கூறினார்கள். அதாவது, அவர்கள் தமது வீட்டினர் சார்பாக வரும்போது வழியில் பயணத்தின்போது அபூஸுஃப்யானின் படையை கடந்து வந்து கொண்டிருக்கும்போது, நீங்கள் ஒன்றும் செய்யவில்லை; நீங்கள் அவர்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அதாவது முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்றும், அவர்களுக்கு எந்தத் துன்பத்தையும் கொடுக்கவில்லை; நீங்கள் அவர்களை விட்டு விட்டீர்கள்; அவர்களை அழிக்கவில்லை என்று அபூஸுஃப்யானும், அவருடைய தோழர்களும் பேசிக் கொண்டிருப்பதாக கூறினார்கள். காஃபிர்கள் பேசும்போது, அந்த முஸ்லிம்களிடத்தில் பல பேர் எப்படிப்பட்ட பெரும் பெரும் மக்களாக இருக்கிறார்கள் என்றால் அவர்கள் உங்களை எதிர்ப்பதற்காக ஒன்று சேர்வார்கள். ஆகவே திரும்பிச் சென்று அவர்களில் எஞ்சியவர்களை நாம் வேரோடு பிடுங்கி எறிந்து விடுவோம் என்று பேசிக் கொண்டார்கள். ஸஃப்வான் பின் உமய்யா இந்த விஷயத்தில் இருந்து அவர்களை தடுத்தார். என் சமுதாயமே! இவ்வாறு செய்ய வேண்டாம்; ஏனெனில், எவர்கள் எல்லாம் போரில் கலந்து கொள்ள முடியாமல் போனதோ அவர்கள் எல்லாம் இப்பொழுது உங்களுக்கு எதிராக அம்மக்களுடன் சேர்ந்து கொள்வார்கள் என்ற அச்சம் எனக்கு உள்ளது; நீங்கள் (மக்காவுக்கு) திரும்பிச் செல்லுங்கள். ஏனெனில், வெற்றி உங்களுக்குத்தான் கிடைத்துள்ளது. நீங்கள் (மதீனாவை நோக்கி) திரும்பிச் சென்றால் நீங்கள் தோல்வி அடைந்து விடுவீர்கள் என்ற அச்சம் உள்ளது என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த முழு விஷயத்தையும் கேட்டபோது, ஸஃப்வான் இந்த அளவு விவரமான ஆள் ஒன்றும் கிடையாது; ஆயினும்,அவருடைய இந்தக் கூற்று மிகவும் விவரமான கூற்றாகும் என்றார்கள். அதாவது, அபூஸுஃப்யானை மதீனாவின் மீது தாக்குதல் நடத்துவதில் இருந்து தடுக்கக் கூடிய விஷயம் ஆகும். ஆனால், அத்துடன் பெருமானார் (ஸல்) அவர்கள், மிகவும் கம்பீரத்துடன் எந்த இறைவனுடைய கையில் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! அவர்கள் மதீனாவின் மீது தாக்குதல் நடத்தினால் எப்படிப்பட்ட கற்களை கொண்டு அவர்கள் குறி வைக்கப்படுவார்கள் என்றால் அது மழையைப் போன்று பொழியும். கடந்த காலத்தைப் போன்று அவர்கள் சுவடு இல்லாமல் அழிந்து விடுவார்கள் என்று கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும், இந்த விவரங்கள் இன்ஷா அல்லாஹ் இனிவரும்

காலங்களில் எடுத்துக் கூறப்படும். பொதுவாக நான் துஆவுக்காக வலியுறுத்தி வருகின்றேன். துஆக்களைத் தொடர்ந்து செய்து வாருங்கள். நினைத்தது போன்று, அச்சப்பட்டது போன்று, ஈரான் மீது நேரடியாகவும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. இது எல்லாருக்கும் தெரியும். இதனால் சூழ்நிலைகள் இன்னும் மோசமாகும். உலகப் போரை இன்னும் மூட்டுவதற்கு முயற்சி செய்கின்ற உலகத் தலைவர்களுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக! முஸ்லிம் சமுதாயத்திற்கும் புரிதலையும் அறிவையும் வழங்குவானாக. அவர்கள் ஒன்றாக ஆகி பிறகு தம்மை எதிர்க்கின்றவர்களை சரியான முறையில் எதிர்க்கக் கூடியவர்களாகவும், நுட்பமாக செயல்படுவதை தமதாக்க கூடியவர்களாகவும் ஆவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக.

இப்பொழுது நான் இரண்டு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துக் கூற விரும்புகிறேன். அவர்களுள் முதலாவது நற்குறிப்பு மதிப்பிற்குரிய மவ்லானா குலாம் அஹ்மத் ஸாஹிப் நஸீம் அவர்களைப் பற்றியதாகும். இவர்கள் ஜமாஅத்தினுடைய முரப்பி ஆவார்கள். ரப்வா ஜாமிஆ அஹ்மதிய்யாவில் பேராசிரியராக இருந்துள்ளார்கள். தற்போது அமெரிக்காவில் வசித்து வந்தார்கள். கடந்த நாட்களில் 93 வயதில் மரணமடைந்து விட்டார்கள். .

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

இவர்களுடைய தந்தையின் பெயர் ஸலாஹ் முஹம்மது ஸாஹிப் ஆகும். அவர்கள் சூரிய, சந்திர கிரகணத்தின் அடையாளத்தை பார்த்து மஹ்தியை தேட ஆரம்பித்தார்கள். அதில் பல வருடங்கள் கடந்த விட்டன. பிறகு 1901-ம் ஆண்டில் பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. தொலைதூர பகுதியாக இருந்த காரணத்தினால் காதியானுக்கு வந்தடைய முடியவில்லை. மீர் ஸலாஹ் முஹம்மது ஸாஹிப் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக கடுமையான எதிர்ப்பை எதிர் கொள்ள நேர்ந்தது. அவர்களது கிராமத்தில் இவர்களின் வீடு ஒரேயொரு அஹ்மதி வீடாக இருந்தது.

மீர் குலாம் அஹ்மத் நஸீம் ஸாஹிப் அவர்கள் கல்வி பயின்றபோது 1947-ல் வக்ஃப் செய்து கடிதம் எழுதினார்கள். அதற்கான ஒப்புதலும் கிடைத்தது. படிப்பை தொடருமாறு வழிகாட்டல் கொடுக்கப்பட்டது. 1948-ல் மதரஸா அஹ்மதிய்யா அஹ்மத் நகரில் கல்வியை ஆரம்பித்தார்கள். இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு 1954-ல் மவ்லவி ஃபாஸில் தேர்ச்சிப் பெற்றார்கள். பிறகு ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனில் ஷாஹிது டிகிரி பெற்றார்கள். 1957-ல் செயல் களத்திற்கு சென்றார்கள். 1960-ல் அன்னார் ஸிராலியோன் சென்றடைந்தார்கள். அங்கு மூன்று வருடம் முபல்லிஃக் பணியுடன் அஹ்மதிய்யா ஸ்கூல் போ உடைய தலைமை ஆசிரியராகவும் தொண்டாற்றினார்கள். பாகிஸ்தான் திரும்பி வந்த பிறகு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் அன்னார் நியமிக்கப்பட்டார்கள். அங்கு நூலகத்தில் முஹ்தமிம் ஆக கடமையாற்றினார்கள். ஏதேனும் ஆசிரியர் விடுப்பில் இருந்தால் அன்னார் வகுப்பும் எடுப்பார்கள். அந்த காலகட்டத்தில் அன்னார் பஞ்சாப் யூனிவர்சிட்டியில் எம்.ஏ அரபி உடைய தேர்வில் தேர்ச்சிப் பெற்றார்கள். 1966-ல் கியானாவில் நியமிக்கப்பட்டார்கள். அங்கு நாலே கால் வருடம் தொண்டாற்றினார்கள். 1970-ல் தலைமையகத்திற்கு திரும்பினார்கள். 1970 முதல் 75 வரை ஜாமிஆ அஹ்மதிய்யாவில் வெளிநாட்டு மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காக ஸ்பெஷல் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்கள். 1975 முதல் 79 வரை 4 வருடம் அன்னார் கேம்பியா- ஆஃப்ரிக்காவில் முபல்லிக் ஆக தொண்டாற்றியிருந்தார்கள். பிறகு 1980 முதல் 1997 வரை ஜாமிஆ அஹ்மதிய்யாவில் வரலாறு மற்றும் சூஃபிசம் ஆகிய பாடங்களின் ஆசிரியராகவும் தொண்டாற்றியுள்ளார்கள்.

இவர்களைப் பற்றிய சம்பவங்கள் இவ்வாறு கூறப்பட்டுள்ளன. அதாவது அன்னார் ஸிராலியோன், கியானா, கேம்பியா ஆகியவற்றில் 11 வருடங்கள் வரை தொண்டாற்றினார்கள். அந்த முழு காலக் கட்டமும் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளிநாடுகளில் இருந்துள்ளார்கள். இவர்களுடைய மனைவி பற்றிய குறிப்பையும் இவர்களின் தியாகங்களைப் பற்றிய குறிப்பையும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஒரு சொற்பொழிவில் கூறியிருக்கின்றார்கள். இவர்களுடைய மனைவியின் பெயர் அமத்துல் மன்னான் கன்வல் ஸாஹிபா அவர்கள் ரப்வாவில் உள்ள கோர்ள்ஸ் ஸ்கூலில் தலைமை ஆசிரியையாக பணியாற்றி இருக்கின்றார்கள். அல்லாஹ் இவர்களுக்கு நான்கு பிள்ளைகளை வழங்கியுள்ளான். அவர்கள் ஜமாஅத் தொண்டுகளில் முன்னணியில் இருக்கின்றார்கள். அனைவரும் நன்கு படித்தவர்களாக இருக்கின்றார்கள். ஒரு மகளுடைய பெயர் டாக்டர் அமத்துஷ் ஷுகூர் ஸாஹிபா ஆகும். இவர்கள் டாக்டர் அப்துல் ஹஃபீஸ் அவர்களுடைய மனைவி ஆவார்கள். அமெரிக்காவில் இருக்கின்றார்கள். இவர்களும் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் கேம்பியா, தன்ஸானியா ஆகியவற்றில் 11 வருடங்கள் தொண்டாற்றி இருக்கின்றார்கள்.

மர்ஹூம் அவர்களுடைய கல்விப் பணியும் உள்ளது. மூன்று நூல்களின் ஆசிரியராக உள்ளார்கள். காமோகர் ருஃயா என்ற நூல் கனவுகளைப் பற்றிய விளக்க நூலாகும், அப்ஜத் எழுத்துகளின் அடிப்படையில் சூஃபிஸம், ஆன்மிகம், விஞ்ஞானம்- இது இரண்டாவது நூலாகும். அவர்களின் மூன்றாவது நூல் யாதே அய்யாம் என்பதாகும். இது அவர்களுடைய சொந்த வாழ்க்கை பற்றிய குறிப்பாகும்.

ஆஸ்திரேலியா உடைய மிஷனரி இன்சார்ஜ் இனாமுல் ஹக் கவ்ஸர் ஸாஹிப் எழுதுகிறார்கள்: பணிவு மற்றும் தன்னடக்கத்துடன் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கக் கூடியவர்களாகவும் அவர்களை கருத்தில் கொள்ளக் கூடியவர்களாகவும் திகழ்ந்தார்கள். பிரிட்டிஷ் கியானா உடைய சுற்றுப் பயணத்தின் போது நான் மூன்று கிராமங்களுக்கு சென்றேன். அங்கு இவர்கள் மூலமாக ஜமாஅத் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்குள்ள பழைய அஹ்மதிகள் அனைவரும் இவர்களைப் பற்றி மிகவும் நல்ல விதமாக நினைவு கூர்ந்தார்கள். இவர்களுடைய புகைப்படத்தையும் தம்மிடத்தில் வைத்துள்ளார்கள். அல்லாஹ் இவர்கள் மூலமாக பிரிட்டிஷ் கியானாவில் ஓர் உறுதியான ஜமாஅத்தை ஏற்படுத்தியுள்ளான்.

ஸூரீனாம் உடைய ஜமாஅத்தின் முரப்பி லயீக் முஷ்தாக் ஸாஹிப் எழுதுகிறார்கள்: மவ்லானா மீர் குலாம் அஹ்மத் நஸீம் ஸாஹிப் அவர்கள் கியானாவில் இருக்கும்போது 67 முதல் 69 வரை ஸூரீனாம் உடைய 3 சுற்றுப் பயணங்களை செய்துள்ளார்கள். இங்கு வாரக் கணக்கில் தங்கி இருந்து இந்த ஜமாஅத்தை மீண்டும் செயல்படத் தகுந்ததாக ஆக்கியிருந்தார்கள். அந்த காலகட்டத்தில் பல்வேறு காரணங்களின் காரணமாக ஜமாஅத் மக்களில் பெரும்பாலார் பிரிந்து சென்று விட்டார்கள். சில அஹ்மதிகள் மட்டும்தான் இருந்தார்கள். அவர்களும் தலைமையகத்துடன் தொடர்பு இல்லாமல் இருந்தார்கள். இந்த சூழ்நிலையில் மதிப்பிற்குரிய மவ்லானா மீர் குலாம் அஹ்மத் நஸீம் ஸாஹிப் அவர்கள் கியானாவிலிருந்து ஸூரீனாம் வந்தார்கள். 15 செப்டம்பர் 1967-ல் முதல் கூட்டத்தை நடத்தினார்கள். அதில் ஆறு நபர்கள் கலந்து கொண்டார்கள். ஜமாஅத்துடன் முறியாத தொடர்பை ஏற்படுத்துவோம் என்று உறுதி கொண்டார்கள். அந்நாட்களில் பாகிஸ்தானில் இருந்து ஷாஹ் அஹ்மத் நூரானி என்ற ஒரு மவ்லவியும் சொரீனாம் வந்திருந்தார். அவர் ஜமாஅத்துக்கு எதிராக ஒவ்வோர் இடங்களிலும் வெறுப்பை ஏற்படுத்தக் கூடிய சொற்பொழிவுகளை நிகழ்த்திக் கொண்டிருந்தார். மவ்லானா மீர் குலாம் அஹ்மத் நஸீம் ஸாஹிப் அவர்களும் பல்வேறு கூட்டங்களை நடத்தி அவருடைய அவதூறுகளுக்கு பதில் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அத்துடன் ரேடியோவிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவம் தொடர்பாக மூன்று நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். 1968 மே மாதம் இரண்டாவது சுற்றுப் பயணத்தின்போது பள்ளிவாசல் கட்டுமானப் பணியுடன் மிஷன் ஹவுஸுக்கான அடிக்கல்லையும் நாட்டினார்கள். அந்தக் கட்டடப் பணி சில வருடங்களில் முழுமை பெற்றது. லாஹூரி ஜமாஅத் உடைய இமாம் அப்துர் ரஹீம் ஜக்கூ மற்றும் சுன்னத் ஜமாஅத் இமாம் ஆகியோர் முனாஸிராவுக்காக சவால் விடுத்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவம் தொடர்பாக அன்னார் பல ஃபோல்டர்களையும் வெளியிட்டார்கள்.

1968 ஜூன் 21 அன்று ஜமாஅத்தினுடைய ஓர் உறுப்பினர் வீட்டில் நடைபெற்ற கேள்வி பதில் நிகழ்ச்சியின் போது தீமையை விரும்பக் கூடிய முஸ்லிம்கள் ஜமாஅத்தினர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். கூறுகிறார்கள்:

ஹைட் டேபிள் ஓர் அறையின் கதவுக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்தது. மவ்லானா ஸாஹிபுக்கு வலப் பக்கமும், இடப் பக்கமும் அமர்ந்திருந்தவர்கள் அன்னாரை தள்ளிக் கொண்டு அறைக்குள் சென்றார்கள். வெளியே வாசலை மூடிவிட்டார்கள். தாக்குதல் நடத்தியவர்கள் ஜமாஅத்தினர்கள் மீது கடுமையாக தாக்குதல் நடத்தினார்கள். மரத்தாலான நாற்காலிகளை தூக்கி அடித்தார்கள். இந்த சம்பவத்தில் ஆண்கள் மட்டுமின்றி பல பெண்களும் கடுமையாக காயம் அடைந்தார்கள். என்னை வெளியே கொண்டு செல்லுங்கள்; நானும் அவர்களை எதிர் கொள்வேன் என்று மவ்லானா ஸாஹிப்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அவர்கள் அறையிலிருந்து சத்தமாக கூறிக் கொண்டே இருந்தார்கள்.

மிகவும் தைரியசாலியான நபராக இருந்தார்கள்.

தீமையை விரும்பக் கூடிய அந்த மக்கள் மவ்லானா ஸாஹிபுடைய ஒரு பீரீஃப்கேஸையும் கொண்டு சென்று விட்டார்கள். அதில் அவருடைய பாஸ்போர்ட் மற்றும் இதர பொருட்கள் இருந்தன. பல நாட்களுக்கு பிறகு போலீஸ் அதை மீட்டெடுத்தது. எவ்வாறு இருப்பினும், இந்த சம்பவத்திற்கு பிறகு அவர்கள் முழுமையான வழிமுறைப்படி போலீஸ் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு ஜமாஅத்தினர்களின் பாதுகாப்பை உறுதியாக்குவதற்கு முயற்சி செய்தார்கள்.

கல்ச்சுரல் சென்டரில் இஸ்லாம் மற்றும் நிகழ்கால பிரச்சினைகள் தொடர்பாக சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். ஜமாஅத்தினர்களை முறையாக தலைமையகத்துடன் தொடர்பு மேற்கொள்வது பற்றி வலியுறுத்தினார்கள். இவ்வாறு அன்னாருடைய முயற்சியினால் சிதறிப் போயிருந்த ஜமாஅத் மீண்டும், தம் (சொந்தக்) கால்களில் நின்றது. அல்லாஹ்வின் அருளால் பிறகு சென்ற முபல்லிஃக்களும் அதை மேற்கொண்டு உறுதிப்படுத்தினார்கள். இப்போது இது உறுதியான ஜமாஅத்தாக ஆகிவிட்டது.

அல்லாஹ் மர்ஹூமுடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவர்களின் பிள்ளைகள் மற்றும் சந்ததிகளிடத்திலும் இந்த நன்மைகளை தொடரச் செய்வானாக!

அடுத்த குறிப்பு அமெரிக்காவின் முன்னாள் அமீர் ஆகிய மதிப்பிற்குரிய டாக்டர் இஹ்ஸானுல்லாஹ் ஸஃபர் ஸாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் இவர்கள் 81 வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رٰجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். ஒரு நீண்ட காலமாக உள்ளூர் சதராகவும், அமெரிக்காவின் நாயிப் அமீராகவும் இருந்துள்ளார்கள். 2002 முதல் 2016 வரை அமெரிக்கா உடைய அமீராக தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்கள். பல நற்பண்புகளுக்கு சொந்தக்காரராக திகழ்ந்தார்கள். மிகவும் அதிகமாக நேசிக்கக் கூடியவராகவும் பரிவு காட்டக் கூடிய மனிதராகவும் இருந்தார்கள். மிகவும் துணிவுள்ள மனிதராக இருந்தார்கள். பின் விட்டுச் சென்றவர்களுள் இரு மகள்கள் உள்ளார்கள். மர்ஹூமுடைய மனைவி சில வருடங்களுக்கு முன்பு ஒரு விபத்தில் மரணமடைந்து விட்டார்கள். இவ்வாறே மகனும் மரணம் அடைந்து விட்டார். அந்த துக்கத்தையும் இவர்கள் மிக பொறுமையுடனும், துணிவுடனும் பொறுத்துக் கொண்டார்கள். ஒருபோதும் நாவில் முறையீடு செய்தது கிடையாது.

இவர்களின் மகள் டாக்டர் ஹானா மர்யம் கூறுகிறார்கள்: என்னுடைய தந்தை மிகவும் நல்ல மனிதராகவும், மார்க்கப் பற்றுள்ள மனிதராகவும் தொழுகை, திருக்குர்ஆன் மற்றும் சந்தாக்களை செலுத்துவதில் முறையானவராகவும் திகழ்ந்ததுடன் இறைவனுடன் உள்ள தம் தொடர்பை தொடரச் செய்வதில் எப்பொழுதும் ஈடுபட்டு வந்தார்கள். தனியாக இருக்கும்போதோ அல்லது சபைகளில் இருக்கும்போதோ ஒருநாளில் பலமுறை கையை உயர்த்தி துஆ செய்வார்கள். மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? என்று ஒருபோதும் அவர்கள் கருதியது கிடையாது. வாழ்வின் கஷ்டங்கள் இருந்தபோதிலும் இறைவனுக்கு எந்நிலையிலும் நன்றி செலுத்த வேண்டும் என்ற விஷயத்தை தம் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: என்னுடைய தந்தை கிலாஃபத்தையும், களங்கமற்றத் தன்மையுடன் நேசிக்கக் கூடியவராக இருந்தார்கள். அவர்களுடைய மார்க்கம், வரலாறு மற்றும் அரசியல் ஞானங்கள் மிகவும் விரிவானதாக இருந்தன. இறுதியாக, மருத்துவமனை செல்லக் கூடிய நாளிலும் அவர்கள் செய்தித்தாளை வாசித்தார்கள்; (என்னுடைய) குத்பாவை கேட்டார்கள். வரலாறு சம்பந்தமான இன்டர்வியூ பார்த்தார்கள். என்னையும் பார்க்குமாறு கூறினார்கள். தன்னுடைய அறிவிற்கும், கருத்திற்கும் பிறருடைய அறிவு மற்றும் கருத்தின் மீது ஒருபோதும் முன்னுரிமை கொடுக்க மாட்டார்கள். மாறாக, பொறுமையாக கேட்பார்கள்; அதைப் பற்றி சிந்திப்பார்கள். திருக்குர்ஆன் அதனுடைய மொழியாக்கத்தின் மீது ஆழமான ஞானம் இருந்தது. கூறுகின்றார்கள்: எங்களுக்கு திருக்குர்ஆனுடைய சொற்பொருளை கூறுவதுடன் அதன் போதனைகள் நமது வாழ்வில் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது? என்றும் கூறுவார்கள்.

தனிப்பட்ட வாழ்வில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தின் அம்சமும் காணக் கிடைக்கிறது. அதேபோன்று அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக் கூடிய பண்பும் அவர்களிடத்தில் காணக் கிடைக்கின்றது. அவர்கள் கூறுகிறார்கள்: ஒருநாள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே துஆ செய்ய ஆரம்பித்தார்கள். மேலும் கூறினார்கள்: பெருமானார் (ஸல்) மற்றும் அவர்களின் ஸஹாபிகளுக்கு சில நேரங்களில் உண்பதற்கு எந்த அளவு குறைவான உணவு இருந்தது என்றால், பேரீத்தம் பழம் மற்றும் ரொட்டிகளை வினிகரில் தொட்டுக் கொண்டு சாப்பிடுவார்கள். நம்மிடத்தில் இந்த அளவு இருந்தபோதிலும் இன்னும் வேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம். நாம் நன்றி செலுத்தக் கூடிய அடியார்களாக ஆக வேண்டும். தேவை உடையவர்களுக்கு உதவி செய்யக் கூடிய ஆர்வம் அதிகமாக இருந்தது. 1967-ல் அவர்கள் மக்கா செல்லக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. வழியில் அவர்களுடைய பார்வை ஒரு நபர் மீது பட்டது. அந்த நபர் நாவினால் ஒன்றும் கேட்கவில்லை. ஆனால், அவருடைய கண்களில் உதவி மற்றும் பசி தெரிந்தது. என்னுடைய தந்தை அந்த நபருக்கு தம்மிடம் இருந்த சிறிது தொகையை கொடுத்தார்கள். அவர் தமது கண்களாலே நன்றி செலுத்தி விட்டு உணவுக்கான ஸ்டாலை நோக்கி செல்ல ஆரம்பித்தார். சில வருடத்திற்கு முன்பு மூன்று துருக்கி கம்பளிகளை வாங்கி வீட்டிற்கு கொண்டு வந்தார்கள். அதைக் கண்ட எனது தாயார் நீங்கள் அதிகமாக விலை கொடுத்து வாங்கி விட்டீர்கள்; இதற்கு நமக்கு தேவையும் இல்லையே! என்று கூறினார்கள். அதற்கு என்னுடைய தந்தை, எந்த பெண்மணி இதை என்னிடம் விற்றாளோ அவளுக்கு இதைத் தவிர வேறு எந்த வருமானமும் இல்லை. நான் அவளுடைய உணர்வைக் கண்டு அவளுக்கு உதவி செய்ய விரும்பினேன் என்று கூறினார்கள். எப்பொழுது மற்றவருடைய நிறையைப் பார்த்து வந்தார்கள்; அவர்கள் குறையை பார்க்க மாட்டார்கள். கஷ்டங்களின் போது ஒருபோதும் பதற்றம் அடையக் கூடாது என்று தம்முடைய குழந்தைகளுக்கு வலியுறுத்தி வந்தார்கள்; எப்பொழுதும் எல்லா விஷயத்தையும் இறைவனிடத்தில் கேட்க வேண்டும்; இறைவன் எதை வழங்குகிறானோ அதில் திருப்தி கொள்ள வேண்டும் என்று கூறுவார்கள். எங்களுக்கு எப்பொழுதும் இந்த அறிவுரையைத் தான் செய்து வந்தார்கள்; மீண்டும், மீண்டும் இந்த அறிவுரையை செய்து வந்தார்கள்.

டாக்டர் நஸீம் ரஹ்மத்துல்லாஹ் ஸாஹிப் எழுதுகிறார்கள்: நான் 1989லிருந்து டாக்டர் இஹ்ஸானுல்லாஹ் ஸஃபர் ஸாஹிப் அவர்களுடன் பணியாற்றி வருகிறேன். மிகவும் நல்ல மனிதர்; இறையச்சம் கொண்டவர்; கிலாஃபத்துடன் ஆழமான களங்கமற்ற தொடர்பு உடையவர்.

அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் முபஷ்ஷிர் மும்மாஸ் ஸாஹிப் எழுதுகிறார்கள்: செயற்குழு உறுப்பினர்களுக்கு மிகவும் மென்மையான முறையில் வழிகாட்டல் வழங்குவார்கள். அவர்கள் ஏதேனும் ஒரு கருத்தை பொருத்தமற்றதாக கருதினால் அதை மறுக்கும்போது சான்றுகளை எடுத்து வைத்து புரிய வைப்பார்கள். அது அல்லாமல் வலுக்கட்டாயமாக தமது கட்டளையை திணிக்க மாட்டார்கள். யாராவது கடுமையாக பேசினாலும் கூட அவருக்கு கடுமையாக பதில் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் புரிய வைக்கின்ற விஷயங்கள் உள்ளத்தின் ஆழம் வரை இறங்கும்.

மிர்ஸா இஹ்ஸான் ஸாஹிப் எழுதுகிறார்: இஹ்ஸானுல்லாஹ் ஸஃபர் ஸாஹிப் அவர்களுடன் இந்த எளியவன் நீண்ட காலம் பணியாற்றக் கூடிய நல்வாய்ப்பு பெற்றுள்ளேன். அமீர் என்ற முறையில் ஜமாஅத் நபர்களுக்கு கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்த கண்டுள்ளேன். எளிய இயல்பு கொண்ட, வேதனை கொண்ட, சமாதானத்தை விரும்புகின்ற, ஏழையின் மீது அனுதாபம் காட்டக் கூடிய பகட்டை விட்டு தூய்மையான கருமித்தனம் மற்றும் பேராசையை விட்டு முற்றிலும் தூய்மையான மனிதராக இருந்தார்கள். தம்முடைய கருவூலத்தை ஜமாஅத் மற்றும் ஏழைகளுக்காக திறக்கக் கூடியவராக இருந்தார்கள். திருக்குர்ஆனுடைய விளக்கவுரை மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை)அவர்களின் நூல்களை வாசிப்பதில் மூழ்கி இருப்பார்கள். ஆணவம், பெருமை, சுயநலம் ஆகியவற்றை விட்டு விலகி இருந்தார்கள். காலத்தின் கலீஃபாவுடைய சிறியதிலும் சிறிய கோபத்தினாலும் கூட நிம்மதி இழந்து விடுவார்கள்.

இதை நானும் அனுபவத்தில் கண்டுள்ளேன். ஏதேனும் ஒரு சிறிய விஷயத்தையும் நான் அவர்கள் தொடர்பாக எழுதும்போது அவர்கள் மிகவும் நிம்மதி இழந்து போய்விடுவார்கள்; உடனடியாக மன்னிப்பு கேட்பார்கள்; சூழ்நிலையை அதற்கு ஏற்ப மாற்றுவதற்கு முயற்சி செய்வார்கள்.

நூல்களை வாசிக்கக் கூடிய அதிக

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

ஆர்வம் இருந்தது. அவருடைய சொந்த நூலகத்தில் எந்த அளவு அரிதான நூல்கள் இருந்தன என்றால் அதை காணக் கூடியவர்கள் வியப்படைந்து விடுவார்கள். திருக்குர்ஆன் மீது அன்பு, நேசம் இருந்தது. எந்தவொரு சபையாக இருந்தாலும் எப்பொழுதும் திருக்குர்ஆனின் வசனங்களை குறித்து சிந்தித்துக் கொண்டே இருப்பார்கள். அவர்களின் சபை பகட்டில்லாத சபையாகவும், அனைவரையும் ஈர்க்கக் கூடிய நேசத்தை கொண்ட சபையாகவும் இருந்தது. அமீர் என்ற முறையில் தமக்காக ஒருபோதும் ப்ரோட்டோகால்- ஐ நடைமுறைப்படுத்தியது கிடையாது. மிகவும் எளிய மனிதராக திகழ்ந்தார்கள்.

ஸஹீர் பாஜவா ஸாஹிப் எழுதுகிறார்கள்: ஒரு நண்பர் என்னிடம் இவ்வாறு கூறினார்: டாக்டர் இஹ்ஸானுல்லாஹ் ஸாஹிப் அவர்கள் அமைதியாக பள்ளிவாசலுக்கு வருவார்கள். யாரும் இல்லை என்றால் தனியாகவே பள்ளிவாசல் மற்றும் பாத்ரூம் ஆகியவற்றை சுத்தம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அவர்களிடம் இதற்கான காரணம் கேட்கப்பட்டபோது, இதன் மூலமாக நான் எனது ஆன்மாவை சுத்தம் செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது என்று கூறினார்கள்.

மிக அதிகமாக தன்னடக்கம் இருந்தது.

பிறகு எழுதுகிறார்கள்: இறைவன் மீதான நேசம் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் அந்தஸ்தை பற்றிய புரிதல் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் நேசம், கலீஃபாக்களுடன் பற்று ஆகியவற்றின் முன் உதாரணமாக திகழ்ந்தார்கள். திருக்குர்ஆன் மீது அவர்கள் கொண்டிருந்த நேசம் விவரிப்பதற்கு அப்பாற்பட்டதாக இருந்தது. கூறுகிறார்கள்: எப்பொழுதெல்லாம் நாங்கள் ஒன்றாக காரில் அமர்வோமோ அப்பொழுதெல்லாம் திருக்குர்ஆனுடைய CD ஓடிக் கொண்டிருக்கும். வீட்டில் எப்பொழுதும் MTA ஓடிக் கொண்டிருந்தது. அவர்களுடைய வீட்டில் எல்லா புறமும் திருக்குர்ஆன் மற்றும் அதன் விளக்கவுரைகள் உள்ளன. ஒரு பெரும் எண்ணிக்கையில் நூல்கள் உள்ளன. ஏறக்குறைய எல்லா அறைகளிலும் அலமாரிகயில் நூல்கள் உள்ளன. அந்த நூல்கள் வைக்கபட்டிருப்பது மட்டுமின்றி அவை முறையாக வாசிக்கப்பட்டும் வந்தன.

டாக்டர் ஸாஹிபின் தாயாருடைய விருப்பம் என்னவாக இருந்தது என்றால், டாக்டர் ஸாஹிப் ரப்வாவில் படித்து வந்தபோது தினந்தோறும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸூல் ஸாஹிப் ராஜிகீ (ரலி) ஆகியோரை சந்திக்க வேண்டும்; அவர்களிடம் துஆவுக்காக விண்ணப்பிக்க வேண்டும் என்பதாக இருந்தது. டாக்டர் ஸாஹிப் கூறுகின்றார்கள்:

இயன்ற அளவு நான் இதற்காக முயற்சி செய்து வந்தேன். எனது முன்னேற்றத்திலும், கல்வியிலும் மற்ற தர்பியத்திலும் இந்த இரு சான்றோர்களுடைய பங்கு அதிகமாக உள்ளது.

எல்லாரையும் நேசித்து வந்தார்கள். ஆனால், ஏழை அஹ்மதிகளுக்காக அவர்களுடைய கண்களில் குறிப்பான நேசம் தென்பட்டது. அதை விவரிக்க இயலாது. அவர்கள் மற்றவருக்கு ஒருபோதும் கஷ்டத்தை விரும்பியே இருக்க மாட்டார்கள். ஆனால் எந்த அஹ்மதிகள் செல்வ வளம் உள்ளவர்களாக இருந்து கொண்டு ஜமாஅத்துக்காக தியாகத்தில் முன்னால் வருவதில்லையோ அவர்களை குறித்து டாக்டர் ஸாஹிப் உடைய உள்ளத்தில் ஒரு வருத்தம் இருந்தது. அதை அவ்வப்போது அவர்கள் வெளிப்படுத்தி வந்தார்கள். ஒவ்வோர் அஹ்மதியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய சரியான அந்தஸ்தை புரிய வேண்டும் என்று மிகவும் விருப்பப்பட்டார்கள். நாம் அதிகமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய தூதுச் செய்தியை புரிய வேண்டும்; தமதாக்கிக் கொள்ள வேண்டும்; அதை பரப்ப வேண்டும் என்பது அவர்களின் விருப்பமாக இருந்தது. அதற்காக புதியதிலும் புதிய வழிமுறைகளை சிந்தித்து வந்தார்கள். சில சமயங்களில் எனக்கும் எழுதுவார்கள். பள்ளிவாசல்களை கட்டுவதன் பக்கம் அதிக கவனம் இருந்தது. அவர்களின் காலகட்டத்தில் பல பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுள்ளன. துஆவின் மீது அதிக நம்பிக்கை இருந்தது. ஒருமுறை செயற்குழுவில் ஒரு நபர் பேசிய விஷயம் துஆவின் கண்ணியத்தை குறைப்பதாக தோன்றியது. அப்போது அவர்கள் செயற்குழுவில் எந்த அளவு கோபப்பட்டார்கள் என்றால் அதை போன்று கோபப்பட்டதை நான் ஒருபோதும் கண்டதில்லை.

மிகவும் எளிய வாழ்வை வாழக் கூடியவராக இருந்தார்கள். ஏதேனும் ஆர்வம் இருந்தது என்றால் அது பள்ளிவாசல்களை கட்டக் கூடிய ஆர்வமாக இருந்தது. ஒவ்வொருவருடைய ஒவ்வொரு விஷயத்தையும் ஒப்புக் கொள்வார்கள். ஆனால் பள்ளிவாசல் கட்ட வேண்டாம் என்று கூறப்படும் விஷயங்களை மிக தவறானது என்று கருதினார்கள். ஆரோக்கியமாக இருந்த வரையிலும் ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் Willingboro வில் உள்ள மஸ்ஜித் பைத்துன் நஸருக்கு வந்து முழுமையாக அதை சுத்தம் செய்வார்கள். எப்பொழுதும் பொருள் தியாகத்தில் முந்திக் கொண்டு பங்கெடுக்கக் கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கி வந்தான்.

தற்போது அமெரிக்காவில் மிர்ஸா மக்ஃபூர் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் அமீராக இருக்கிறார்கள். அவர்கள் எழுதுகின்றார்கள்: டாக்டர் இஹ்ஸானுல்லாஹ் ஸஃபர் ஸாஹிப் அவர்களுக்கு அல்லாஹ் நீண்ட காலம் நாயிப் அமீராகவும், பிறகு அமெரிக்கா உடைய அமீராகவும் தொண்டாற்றக் கூடிய நல்வாய்ப்பை வழங்கி இருந்தான்.

அவர்கள் அமீராக இருந்தபோது நான் அமெரிக்காவுக்கு மூன்று சுற்றுப் பயணம் செய்துள்ளேன். மிகவும் நல்ல முறையில் அவர்கள் அந்த சுற்றுப் பயணத்தின் திட்டங்களை வகுத்தார்கள்; ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். பல வருடங்களாக நோயின் காரணமாக நடமாடுவது குறைந்து விட்டது. ஆனால் அமாரத்துடைய பொறுப்புகளை மகிழ்ச்சியுடன் முழுமையாக நிறைவேற்றி வந்தார்கள். அவர்களுடன் பேசும்போது பெரும்பாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொடர்பாகவே பேசுவார்கள். பேசும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொடர்பாக பேசி வந்தார்கள்; அன்னாரின் நூல்கள் தொடர்பாக பேசி வந்தார்கள். அன்னாருடன் ஒரு குறிப்பான தொடர்பை வெளிப்படுத்தி வந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பும் கட்டுப்படுதலும் இருந்தது.

பிறகு, அமெரிக்காவுடைய தற்போதைய அமீர் ஸாஹிப் அவர்கள் எனக்கு எழுதுகிறார்கள்: தங்கள் சார்பாக வரக் கூடிய அனைத்து வழிகாட்டல்களையும் ஜமாஅத் மக்கள் வரை உடனடியாக கொண்டு சேர்க்க வேண்டும் என்று முயற்சி செய்து வந்தார்கள்.

எவ்வாறு இருப்பினும், நானும் இதை கண்டுள்ளேன். கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதில் நிகரற்றவராக இருந்தார்கள். தம்முடைய கருத்தை மிக மகிழ்ச்சியுடன் விட்டு விடுவார்கள்.

அல்லாஹ் இவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவர்களின் பெண் பிள்ளைகளையும் அல்லாஹ் தமது பாதுகாப்பில் வைப்பானாக. அவர்களின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

தமிழாக்கம்

மவ்லவி APA.தாரீக் அஹ்மத்

* * * * *

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

(தஃப்ஸீரே கபீர்)1-ம் பக்கத் தொடர்ச்சி..

அழித்து உனது இருப்பை என் மூலமாக வெளிப்படத் தொடங்க வேண்டும். மேலும், அடியார் மூலமாக எந்த அளவுக்கு அல்லாஹ்வின் இருப்பு வெளிப்படுமோ அதே அளவிற்கு அவர் தனது நல்ல நோக்கத்தில் வெற்றி பெறுவார் என்ற விஷயம் வெளிப்படையாகும்.

ஆயினும், இந்த சொல் மற்றவர்களுக்கு வரும்போது அந்நேரத்தில் அவர்களின் அந்தஸ்து மற்றும் தகுதியின் அடிப்படையில் அந்த சொல்லிற்கு பொருள் அமையும். ஓர் உயர்தரமான நம்பிக்கையாளர் இந்த சொல்லை பயன்படுத்தும்போது அதன் பொருள் இவ்வாறாக இருக்கும். அதாவது, உயர் சிறப்புகளை அடைவதிலிருந்து இழப்பிற்குரியவராக ஆக்கும் அந்த பலவீனங்களிலிருந்து என்னை பாதுகாப்பாயாக! என்பது அதன் பொருளாக இருக்கும்.நடுநிலையான அந்தஸ்து கொண்ட நம்பிக்கையாளருக்காக இந்த சொல் பயன்படுத்தப்படும்போது, அதன் பொருள் இவ்வாறாக இருக்கும்; அதாவது, எனது தவறுகளை மறைத்து எனக்கு உயர்ந்த முன்னேற்றங்களைப் பெறுவதற்கு நற்பேறு வழங்குவாயாக! என்பதாகும். மேலும் பொதுவான நம்பிக்கையாளருக்கு இந்த சொல் பயன்படுத்தப்படும்போது, அதன் பொருள் இவ்வாறாக இருக்கும். அதாவது, எனது பாதத்தை ஈமானில் உறுதிப்பாட்டுடன் நிலைநிறுத்துவாயாக! ; மேலும் எனது பாவங்கள் என்னை அழித்துவிடக் கூடாது.

உண்மையைத் தேடக் கூடிய ஒருவர் இந்த சொல்லை பயன்படுத்தும்போது பின்னர் அதன் பொருள் இவ்வாறாக அமையும்; அதாவது, எனது பாவம் என்னை நேர்வழியிலிருந்து இழப்பிற்குரியவனாக ஆக்கிவிடக் கூடாது. எனவே எனது பாவங்களை மன்னிப்பாயாக! இந்த சொல்லின் பயன்பாடு பல்வேறு சந்தர்ப்பங்களின் அடிப்படையில் அமைகின்றது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 3, பக்கம் 489, காதியான் பதிப்பு 2010)

* * * * *

**குத்பா பேருரை 8.3.24**
**12-ம் பக்கத் தொடர்ச்சி....**

இறைவனுக்கு நேசத்திற்குரியவராக இருந்தார்கள் என்ற காரணத்தினால் மட்டுமே இந்த நேசம் இருந்தது. அன்னார் (ஸல்) முஹம்மதாக இருந்தார்கள் என்ற காரணத்தினால் இந்த நேசம் இருக்கவில்லை. மாறாக, அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் தூதராக இருந்தார்கள் என்ற காரணத்தினால் இந்த நேசம் இருந்தது.

அடுத்து அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: அந்த (ஸஹாபா) பெருமக்கள் உண்மையில் இறைவனின் நேசர்களாக இருந்தனர். மேலும், இறைவன் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசதித்து வந்தான். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளும் அன்னார் (ஸல்) மீது அன்பு செலுத்தி வந்தார்கள். மேலும், ஆண்கள் மட்டுமே இல்லை ; மாறாக, பெண்மணிகளின் உள்ளங்களிலும் அன்னார் (ஸல்) மீது எவ்வளவு அன்பும், நேசமும் இருந்தது என்று பாருங்கள்!

பின்னர் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து அந்த மக்களின் உள்ளங்களில் இந்த நேசத்தை எல்லாம் வல்ல இறைவன் உருவாக்கியிருந்தான். அவர்கள் எல்லா விஷயங்களிலும் இறைவனுக்கே முன்னுரிமை வழங்கி வந்தார்கள். இதுவே ஏகத்துவமாக இருந்தது. அந்த இறைவன் உலகில் எல்லா இடங்களிலும் இவர்களை வெற்றி பெறச் செய்து விட்டான். அவர்களுக்கு முன்னல் ஒரேயொரு விஷயம் மட்டுமே இருந்தது. அது இதுவாகும். அதாவது, அவர்களின் இறைவன் அவர்கள் மீது திருப்தி அடைந்து விட வேண்டும் என்பதே அந்த விஷயமாக இருந்தது. எனவே இறைவன் அவர்களை

رَضِيَ اللهُ عَنْهُمْ

என்று குறிப்பிட்டுள்ளான்.அவர்கள் எல்லா விஷயங்களின் மீதும் இறைவனுக்கே முன்னுரிமை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பிற்காலத்தில் முஸ்லிம்களின் இந்த நிலை எஞ்சியிருக்கவில்லை. மேலும், தற்போது அவர்களுக்கு அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்கின்றது என்றால் அது வெறும் எண்ணத்தின் அளவில் மட்டுமே ஆகும். எங்களுக்கு இறைவனுடன் தொடர்பு இருக்கின்றது என்று வெறும் எண்ணத்தின் அடிப்படையில் மட்டுமே அவர்கள் கூறுகின்றனர். நாம் அல்லாஹ்வை ஏற்றுக் கொள்கிறோம்; ஏகத்துவத்தை ஒப்புக் கொள்கிறோம் என்று நிச்சயம் (அவர்களின்) எண்ணத்தில் இருக்கின்றது. உள்ளத்தில் இது இல்லை. உள்ளமோ வேறு எங்கோ லயித்திருக்கின்றது. இறைத் தூதர் (ஸல்) அவர்களைக் குறித்து அவர்களுக்கு முன்னால் எடுத்துரைக்கப்பட்டால் பின்னர் அவர்களின் உள்ளங்களில் நேசத்தின் நரம்புகள் அசைய தொடங்கி விடுகின்றன. (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 23, பக்கம் 46 -47,)

இவை அனைத்தும் இருக்கின்றது. ஆனால், இருக்க வேண்டிய ஏகத்துவத்திற்கான அசல் வடிவம் அவர்களிடம் இல்லை.

ஒரு வரலாற்று ஆசிரியர் எழுதுகின்றார்: சந்தேகத்திற்கு இடமின்றி, மதீனாவின் துன்பம் என்பது பெரும் வேதனை மிகுந்த துன்பமாக இருந்தது. ஆனால், மக்கா மற்றும் மதீனாவிற்குமிடையில் துன்பத்தை எதிர்கொண்ட விதத்தில் பெரும் வித்தியாசம் இருக்கின்து. இரு தரப்பிற்கும் பெரும் துன்பம் ஏற்பட்டது. மதீனாவில் நிலைமைகள் மிகவும் மோசமாக இருந்தன. ஆனால், மக்கா மற்றும் மதீனாவை ஒப்பீடு செய்து பார்த்தால், (அங்கும் துன்பம் இருந்தது. மக்காவாசிகளுக்கும் அபாயம் இருந்தது) ஆயினும் நீண்ட நெடிய வித்தியாசம் இருந்தது. அந்த வித்தியாசம் என்னவாக இருந்தது? மக்கத்து இணை வைப்பாளர்கள் தங்களது பத்ர் போரின் துன்பங்களை பலவீனம், பதற்றம் மற்றும் அச்சம் ஆகியவற்றால் எதிர் கொண்டனர்.

மக்கா வாசிகள் தாங்கள் அடைந்த பத்ர் போர் தோல்வியை தங்களின் பலவீனம், பதற்றம் மற்றும் அச்சத்தால் எதிர் கொண்டார்கள். மேலும் மதீனா வாசிகள் தங்களது உஹது போர் துன்பங்களை தன்னிகரற்ற பொறுமை, ஈமான், உறுதிப்பாடு மற்றும் வீரம் ஆகியவற்றுடன் எதிர் கொண்டார்கள்.

தற்போது உஹது போரில் முஸ்லிம்களுக்கும் நிறைய பாதிப்பு ஏற்பட்டிருந்தது. ஆனால், அவர்களுடைய இந்த தன்னிகரற்ற பொறுமையும், வீரமும் அவர்களுக்கு இதனை பெற்றுக் கொடுத்தது.

மதீனாவின் படைக்கு உஹது போரில் ஏற்பட்டிருந்த பாதிப்பின் காரணமாக மதீனா வாசிகளில் எவரிடத்திலும் பதற்றம், அச்சம் மற்றும் பலவீனத்தின் எந்த அடையாளமும் இருக்கவில்லை. மேலும் அதற்கான மாபெரும் சான்று இதுவாகும். அதாவது, ஒரு முஸ்லிம் பெண்மணி உஹது போரில் தனது மகன், கணவர், சகோதரர் மற்றும் தந்தையை இழந்திருந்தார். மேலும் அவர் ஆச்சரியமடையவும் இல்லை ; மேலும் அந்த துன்பத்தால் நடுநிலை எல்கைளிலிருந்து வெளியே சென்று விடவுமில்லை. மேலும், அவர் பனூ தீனார் கோத்திரத்தின் பெண்ணாக இருந்தார். அவர் போரின் மையக் களத்தின் பக்கம் சென்று விட்டார். மேலும் அவர் தனது மகன், கணவர், சகோதரர் மற்றும் தந்தையை இரத்த வெள்ளத்தில் கொலையுண்டு கிடப்பதைக் கண்டார். அப்போது, அவர் தனது துன்பத்தை சற்றும் பொருட்படுத்தவில்லை. மேலும் அவர் அந்த நால்வரையும் விட தமக்கு நேசத்திற்குரியவராக இருந்த அந்த மனிதரைக் குறித்து விசாரித்தார். அவர் அன்னாரை நலமுடன் இருப்பதைக் கண்டபோது, எல்லாத் துன்பமும் அது எவ்வளவுதான் பெரிதாகினும் சரியே. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிரில் ஒன்றுமற்றதாகும். (முஹம்மது அஹ்மத் பாஷ்மைல் அவர்களின் நூல் உஹது போர்,பக்கம் 237 -238)

எஞ்சியவை எதிர்வரும் நாட்களில் இன்ஷா அல்லாஹ்.

பாலஸ்தீன மக்களுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு எளிதை உருவாக்குவானாக. எதிரியோ தனது அனைத்து வகையான இழிவான சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகளின் மூலமாக அவர்களை அழித்துவிடுவதில் மும்முரமாக இருக்கின்றான். வல்லரசுகள் போரைத் தடுப்பதற்கு பகரமாக அதனை மூட்டுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. அமெரிக்கா அதிபர் கடந்த திங்கட்கிழமையன்று போர் நிறுத்தம் செய்யும்படி கூறியிருந்தார். தற்போது கூறுகின்றனர்: ரமலானிற்கு முன்னர் போர் நிறுத்தம் நடைபெறும். அதுவும் தற்காலிகமானதாக இருக்கும்; வெறும் ஆறு வாரங்களுக்கு இருக்கும். இதுவோ இஸ்ரேலிற்கு சந்தர்ப்பம் கொடுப்பதற்கான ஒரு வழிமுறையாகும். அதாவது இதற்கிடையில் அவர்களுக்கு ஓய்வும் கிடைத்து விடும்; மேலும் அவர்கள் புத்துணர்ச்சிப் பெற்று பின்னர் மீண்டும் அநீதியிழைக்கத் துவங்கி விடுவர். எனவே அல்லாஹ் மட்டுமே அவர்களின் கைகளை தடுத்து நிறுத்த முடியும். எனவே அதிகம் துஆ செய்யுங்கள்.

இதேபோன்று எந்தத் தொண்டு நிறுவனத்தின் மூலமாக அவர்களுக்கு உணவு அல்லது மருந்துப் பொருட்கள் போன்றவை அல்லது வேறு எந்த வகையிலான உதவியும் கிடைக்க முடியுமோ அதனை அஹ்மதிகள் செய்ய வேண்டும். தமது வட்டத்தில் அவர்களுக்கு ஆதரவாக அநீதியை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து முயற்சியும் செய்ய வேண்டும். அரசியல்வாதிகளுக்கு கடிதங்கள் எழுதுங்கள்; மேலும் இவற்றை எழுதுங்கள்; நாம் சோர்வடைந்து விடக் கூடாது என்று நான் முன்னரும் கூறியிருந்தேன். நீங்கள் செய்து கொண்டிருப்பது மாபெரும் தவறாகும் என்று அரசியல்வாதிகளுக்கு புரிய வையுங்கள். துஆக்கள் செய்வதற்கும், தமது ஆன்மிக நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்கும் அல்லாஹ் பாலஸ்தீனியர்களுக்கும் நற்பேறு வழங்குவானாக.

உக்ரைன் மற்றும் ரஷ்யா போரிலும், அதில் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா நேரடியாக பங்குப் பெறுவதற்கான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதனாலும் உலகப் போருக்கான அபாயங்கள் மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.அல்லாஹ் உலகை அழிவிலிருந்து பாதுகாப்பானாக என்று இதற்காக எங்கு நீங்கள் துஆ செய்வீர்களோ அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள். நான் முன்னரும் கூறியிருந்தேன்.மேலும், முன்னர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் அணு ஆயுதங்களின் பாதிப்புகளிலிருந்து தப்பிப்பதற்கு மருந்து ஒன்றினை வழங்கியிருக்கின்றார்கள். அது ஜமாஅத்தில் மிகவும் பிரபல்யமானதாகும். நமது ஹோமியாபதித் துறையும் அதனை வழங்கும். அதனையும் குறைந்தபட்சம் ஒரு கோர்ஸ்; மூன்று, மூன்று தடவை மீண்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்.(ஒவ்வொரு மருந்தையும் மூன்று முறை எடுத்துக் கொள்ள வேண்டும்) அதேபோன்று அஹ்மதிகள் மூன்று மாதங்களுக்கான ரேஷன் பொருட்களையும் வீட்டில் வைக்க வேண்டும். குறிப்பாக எங்கு போருக்கான நேரடி அபாயம் இருக்கின்றதோ அங்குள்ளவர்கள் வைத்துக் கொள்ள வேண்டும். போர் நடைபெறவில்லையென்றாலும் அப்போதும் கூட அதனால் நன்மையே விளையும். பழைய ரேஷன் பொருட்களையும் மக்கள் சேமித்து வைத்திருந்தனர். பல்வேறு இயற்கைச் சீற்றங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் அவை

திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில்
குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எங்களுக்கு பயன் விளைந்தது என்றே அவர்கள் கூறினர்.

ஏமன் நாட்டின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டை விரைவில் செய்வானாக. மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத் நாட்டிற்கு எதிராக சதித்திட்டம் தீட்டிக் கொண்டிருக்கின்றது என்று ஏமன் நாட்டின் எந்த ராணுவத்திற்கு அல்லது அங்குள்ள எந்த அமைப்பிற்கு சந்தேகம் இருக்கின்றதோ அவர்களின் சந்தேகங்களை அல்லாஹ் அகற்றுவானாக. மேலும் அவர்களின் விரைவில் விடுதலையாட்டுமாக.

அல்லாஹ் உலகிற்கு இந்த அறிவையும் வழங்குவானாக. அதாவது அவர்கள் முன்னேற்றம் என்ற பெயரில் உலகின் அசுத்தங்களில் வீழ்வதற்கு பகரமாக அல்லாஹ்வை அடையாளம் கண்டு கொள்ளட்டுமாக. முஸ்லிம் நாடுகளுக்கும் அல்லாஹ் நீதியில் நிலைநின்றவாறு ஒன்றுபடுவதற்கான நற்பேறை வழங்குவானாக. நாம் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை ஒவ்வொரு நபர் வரையிலும் கொண்டு சேர்ப்பதற்கான நற்பேறை அல்லாஹ் நமக்கும் வழங்குவானாக.

பஹாவல்பூர் மாவட்டத்தின் அஹ்மதிய்யா சக் ஜமாஅத்தின் தலைவரும் ஹிழ்ர் ஹயாத் சீமா சாஹிபின் மகனுமான மதிப்பிற்குரிய தாஹிர் இக்பால் சீமா ஸாஹிப் அவர்கள் கடந்த நாட்களில் ஷஹீதாக்கப்பட்டு விட்டார்கள் என்ற ஒரு வேதனை மிகுந்த தகவலும் உள்ளது.. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

தாஹிர் இக்பால் சீமா ஸாஹிப் அவர்களின் ஷஹாதத் சம்பவம் இவ்வாறாகும். அதாவது, இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் மார்ச் 4-ம் தேதி துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கி விட்டார்கள்.ஷஹாதத் நேரத்தில் மர்ஹூமின் வயது 60-ஆக இருந்தது. மேலும் விளக்கங்கள் இவ்வாறாகும். அதாவது, பஹாவல்பூர் மாவட்டம் சக் 84 ஃபத்ஹ் ஜமாஅத்தின் சத்ர் தாஹிர் இக்பால் சீமா ஸாஹிப் ஃபஜ்ர் தொழுகையை நிறைவேற்றிய பிறகு வழக்கம்போல் நடைபயணம் செல்வதற்கு புறப்பட்டார்கள். அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் மோட்டர் சைக்கிளில் பின்தொடர்ந்து சென்று சுட்டு விட்டார்கள். அன்னாரின் தலையை இரண்டு குண்டுகள் துளைத்தன. அதன் விளைவாக அன்னார் நிகழ்விடத்திலேயே ஷஹீதாகி விட்டார்கள். சம்பவத்திற்கு பிறகு தாக்குதல் நடத்தியவர்கள் தப்பி ஓடிவிட்டனர். போலீஸ் அடையாளம் தெரியாத நபர்களுக்கு எதிராக வழக்குப் பதிந்து விட்டது. ஆனால் அங்கோ அது தொடர்பாக விசாரணை எதுவும் நடைபெறுவதில்லை. எவ்வாறு இருப்பினும், வழக்குப் பதியப்பட்டுள்ளது. ஷஹீது மர்ஹூம் அவர்களுக்கு எவருடனும் எந்தப் பகைமையோ அல்லது தனிப்பட்ட விரோதமோ இருக்கவில்லை. தமது கிராமத்திலும், சுற்றுவட்டாரக் கிராமங்களிலும் இவர்கள் மிகவும் நற்பெயர் கொண்டவராகவும், மிகவும் கண்ணியமிக்க நபராகவும் பிரபல்யம் அடைந்திருந்தார்கள். மார்க்கக் காரணங்களைத் தவிர்த்து அன்னாரின் ஷஹாதத்திற்கு வேறு எந்த காரணமும் தென்படவில்லை.

ஷஹீது மர்ஹூம் அவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் அன்னாரின் கொள்ளுப் பாட்டனார் மதிப்பிற்குரிய முஹ்ஸீன் கான் ஸாஹிபின் சகோதரரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியுமான ஹஸ்ரத் ஹக்கீம் தீன் ஸாஹிப் (ரலி) ஸாஹிப் அவர்கள் மூலமாக தோன்றியது. அன்னார் 1905-ல் ஸர்கோதாவின் சக் 46 எனும் இடத்திலிருந்து காதியானிற்கு சென்று பைஅத் செய்திருந்தார்கள். மேலும், காதியானிலேயே குடியேறிவிட்டார்கள். அதன் பிறகு அன்னார் தமது சகோதரர்கள் மற்றும் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கு பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணையும்படி அறிவுறுத்தினார்கள். அதன் காரணமாக ஷஹீது மர்ஹூமுடைய கொள்ளுப் பாட்டனார் முஹ்ஸீஹ் கான் ஸாஹிப் அவர்கள் அனைத்து சகோதரர்களுடன் கடிதத்தின் மூலமாக பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டார்கள். பின்னர் இந்தக் குடும்பம் பஹாவல்பூர் மாவட்டம் சக் 84-எனும் ஊரில் இடம்பெயர்ந்து சென்று விட்டது. ஷஹீது மர்ஹூம் 1964-ல் பஹாவல்பூர் சக் 84-ல் பிறந்தார்கள். அங்கேயே மெட்ரிக் வரை கல்விப் பயின்றார்கள். விவசாயத் தொழிலில் இணைந்து விட்டார்கள். இறைவனின் அருளால் வஸிய்யத் அமைப்பில் இணைந்து விடார்கள். ஷஹாதத் நேரத்தில் ஜமாஅத்தின் சத்ர் என்ற ரீதியில் தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றுக் கொண்டிருந்தார்கள். இதற்கு முன்னர் செகரட்டரி மால் மற்றும் ஸயீம் அன்ஸாருல்லாஹ் என்ற பொறுப்பிலும் தொண்டாற்றுவதற்கு அன்னாருக்கு நற்பேறு கிடைத்து வந்துள்ளது.சந்தாக்களை முறையாக செலுத்தி வந்தார்கள்; நோன்பு மற்றும் தொழுகை மட்டுமின்றி தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றுவதையும் மிகவும் கருத்தில் கொண்டு வந்தார்கள்.பயணத்தின் போதும் தொழுகையை நிறைவேற்றுவதற்கு சிறப்பான ஏற்பாடு செய்து வந்தர்கள். கிலாஃபத்துடன் அன்பு கொண்டிருந்தார்கள். எனது குத்பாக்களை தொடர்ந்து கேட்டு வந்தார்கள். மேலும், குடும்பத்தின் அனைத்து நபர்களும் குத்பா கேட்டு விட்டார்களா? என்றும் ஆய்வு செய்து வந்தார்கள். ஷஹாதத் சம்பவத்தின்போது கட்டாயச் சந்தாக்கள் மற்றும் ஹிஸ்ஸா ஜாயிதாத் கணக்கை முழுமை செய்திருந்தார்கள். ஜமாஅத் விருந்தினர்களை சிறப்பாக கவனத்தில் கொண்டிருந்தார்கள். மேலும், அவர்களின் விருந்து உபசரிப்பு தமது வீட்டில் செய்யப்பட வேண்டும் என்று முயற்சி செய்து வந்தார்கள். விருந்து உபசரிப்பு ஜமாஅத் சார்பாக இல்லாமல் தனிப்பட்ட முறையில் இருக்க வேண்டும் என்று முயற்சி செய்வார்கள். அங்குள்ள கபர்ஸ்தானிற்கும் மர்ஹூம் ஏற்பாடு செய்தார்கள். பாகிஸ்தானில் கல்லறைகளுக்கும், அடக்கஸ்தலங்களுக்கும் பெரும் சிக்கல் இருக்கின்றது. அன்றாடம் ஏதாவது ஒரு தீய மனிதன் அல்லது சங்கம் நமது கப்ர்களின் பலகைகளை உடைத்து விட்டு செல்கின்றனர். அவர்கள் தமது கப்ர்ஸ்தானிற்கும் ஏற்பாடு செய்தார்கள். அடக்கஸ்தலங்களையும் ஆய்வு செய்து வந்தார்கள். அவற்றை பராமரித்தும் வந்தார்கள். தற்போது இதுவும் அங்கு பெரும் பணியாக இருக்கின்றது. கிராமத்தின் பெரும்பாலான மக்கள் அமானிதங்களை அன்னாரிடம் வைத்து வந்தார்கள். அவர்களில் ஜமாஅத் அல்லாத மக்களும் அடங்குவர். நம்பிக்கை இருந்தது என்றால் அஹ்மதி மீது மட்டுமே இருந்தது. அதாவது இவரால் தான் நமது அமானிதங்களை சரியான முறையில் பேண முடியும் என்று நம்பி வந்தனர். அத்துடன் பகைமையும் அவர்கள் கொண்டிருந்தனர். இந்த மக்களின் இந்த செயலும் விநோதமான வழிமுறையாக இருக்கின்றது. ஆனால், எவ்வாறு இருப்பினும், எவர்கள் அமானிதங்களை அன்னாரிடம் வைத்து வந்தார்களோ அவர்கள் கண்ணியமான மக்களாகவே இருந்தனர். ஆனால், மற்றவர்களுக்கோ இதன் பின்னரும் புரிவதில்லை.

அன்னாரின் துணைவியார் கஷ்ஃர் நாஹிதா ஸாஹிபா கூறுகின்றார்கள்: எனது கணவர் மர்ஹூம் அவர்களின் நடைமுறை என்னுடன் மிகவும் பரிவு மிக்கதாக இருந்து வந்தது. வீட்டில் தொழுகையை நிறைவேற்றுதல் மற்றும் காலத்தின் கலீஃபாவின் குத்பாவை கேட்டல் போன்ற விஷயங்களில் ஆய்வு செய்து வந்தார்கள். எனது உறவினர்களையும் எப்போதும் தம்மவர்களாக கருதி நட்பு ரீதியிலான தொடர்பையும் வைத்து வந்தார்கள்.

ஷஹீது மர்ஹூம் அவர்களின் மகள் மதீஹா தாஹிர் கூறுகின்றார்கள்: ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதில் எப்போதும் முன்னணியில் இருந்து வந்தார்கள். கட்டுப்படுதல் என்ற பண்பு மிகவும் சிறப்பானதாக இருந்தது. கிலாஃபத்துடன் எல்லையற்ற மரியாதை மற்றும் பற்றுகொண்ட தொடர்பு இருந்தது.

பஹாவல்பூர் மாவட்டத்தின் அமீர் ஸாஹிப், பஹாவல்பூர் மாவட்ட முரப்பி மற்றும் ஏனைய பொறுப்பாளர்களும் ஷஹீது மர்ஹூம் அவர்களை மிகவும் புகழ்ந்துள்ளார்கள். எல்லாருடைய அன்பையும் பெறுகின்ற பண்பிற்கு சொந்தக்காரராக இருந்தார்கள். படைப்பினசேவைக்கான உணர்வினால் நிறைந்திருந்தார்கள். விருந்து உபசரிப்பு தனித்தன்மையாக இருந்தது. தலைமையக பிரதிநிதிகள் மற்றும் வாழ்வை அர்ப்பணித்தவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்கள்.

ஷஹீது மர்ஹூம் பின்விட்டுச் சென்றவர்களில் அன்னார் தமது மனைவியை மட்டுமின்றி, இரண்டு மகன்களையும், ஒரு மகளையும் நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் ஒரு மகன் லுக்மான் அஹ்மத் தமது குடும்பத்துடன் ஜெர்மனியில் இருக்கின்றார். மகள் மதீஹா தாஹிர் இங்கு யூ.கேவில் வசிக்கின்றார். ஒரு மகன் ஸல்மான் தாஹிர் அன்னாருடன் அங்கு விவசாயம் செய்து வந்தார். அல்லாஹ் ஷஹீது மர்ஹூமின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக. மேலும் அனைத்து உறவினர்களுக்கும் அழகிய பொறுமையை வழங்குவானாக. மேலும், அன்னாரின் நன்மைகளை தொடர்வதற்கான நற்பேறை வழங்குவானாக. தொழுகைக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் அன்னாரின் ஜனாஸா தொழுகையையும் நான் தொழ வைப்பேன்.

தமிழாக்கம்
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

# ஜுமுஆ பேருரை

**உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் & ஸஹாபா மற்றும் ஸஹாபியாக்களின் தியாகங்கள் தொடர்பான ஈமானை வலுவூட்டும் சம்பவங்களைப் பற்றிய குறிப்புகள்**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாயும் தந்தையும் தங்கள் மீது அர்ப்பணமாகட்டும்.தாங்கள் நலமுடன் இருக்கும்போது பின்னர் எனக்கு எந்தப் பாதிப்பைக் குறித்தும் கவலையில்லை

உஹது போரின்போது ஒருமுறை இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: உம் மீது எனது தாயும், தந்தையும் அர்ப்பணம். நீர் தொடர்ந்து அம்பை எய்து கொண்டே செல்வீராக.
ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் தமது வாழ்நாளின் இறுதி வரை இந்த சொற்களை மிகவும் பெருமிதத்துடன் எடுத்துரைத்து வந்தார்கள்.
ஸஹாபா பெருமக்கள் இறை நேசர்களாக இருந்தனர். இறைவன் இறைத்த தூதர் (ஸல்) அவர்களை நேசித்து வந்தான். எனவே ஸஹாபிகள் அன்னார் (ஸல்) மீது நேசம் கொண்டிருந்தார்கள்

பஹாவல்பூர் மாவட்டத்தின் சக்ஃபத்ஹ் ஜமாஅத்தின் தலைவர் ஹிழ்ர் ஹயாத் சீமா அவர்களின் மகன் மதிப்பிற்குரிய தாஹிர் இக்பால் சீமா ஸாஹிப் அவர்களின் ஷஹாதத் சம்பவம் மற்றும் மர்ஹூமைப் பற்றிய நற்குறிப்பும் ஜனாஸா காயிப் தொழுகையும்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 08 மார்ச் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **அமான்** மாதம் **08ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**கடந்த இதழின் தொடர்ச்சி....**

ஸஃது பின் அபீ வகாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பனூ தீனார் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை கடந்து சென்றார்கள். அவருடைய கணவர், சகோதரர் மற்றும் தந்தை ஆகியோர் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் உஹது போரில் கலந்து கொண்டிருந்தார்கள். மேலும் அவர்கள் அனைவரும் ஷஹீதாகி விட்டனர். அந்தப் பெண்ணிடம் அவர்களுக்காக இரங்கல் தெரிவிக்கப்பட்டபோது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எப்படி இருக்கின்றார்கள்? என்று அந்தப் பெண்மணி கேட்டார். அப்போது, இன்னாரின் தாயே, அன்னார் (ஸல்) நலமாக இருக்கின்றார்கள்; மேலும், அல்ஹம்துலில்லாஹ் நீர் விரும்புவது போன்றே அன்னார் (ஸல்) நலமுடன் உள்ளார்கள். அப்போது, எனக்கு காட்டுங்கள் ; நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காண விரும்புகின்றேன் என்று அந்தப் பெண்மணி பதிலளித்தார். எனவே இறைத் தூதர் (ஸல்)அவர்களின் பக்கம் சைகை செய்து அந்தப் பெண்மணிக்கு காட்டப்பட்டது. அந்தப் பெண்மணி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பார்த்தபோது, தாங்கள் நலமுடன் இருக்கும்போது பின்னர் எல்லா துன்பமும் சாதாரணமானதாகும் என்று கூறினார். (ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு, பக்கம் 545)

மற்றோர் அறிவிப்பில் அந்தப் பெண்மணியின் மகன் ஷஹீது ஆன குறிப்பும் கிடைக்கின்றது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹது போர் சந்தர்ப்பத்தின்போது மதீனா வாசிகள் கடும் பதற்றத்திற்கு இரையாகி விட்டனர். ஏனெனில், இறைத் தூதர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஷஹீது ஆக்கப்பட்டு விட்டார்கள் என்ற வதந்தி பரவியிருந்தது. எதுவரையென்றால், மதீனாவின் தெருமுனைகளில் அழுகுரல் ஒலிக்கத் துவங்கி விட்டது. அப்போது ஒரு அன்ஸாரி பெண்மணி பதற்றமடைந்தவாறு வீட்டிலிருந்து வெளியேறினார். அவர் தமக்கு முன்னால் தமது சகோதரர்,மகன் மற்றும் கணவரின் சடலங்கள் இருப்பதைக் கண்டார். அறிவிப்பாளர் கூறுகின்றார்: அந்தப் பெண்மணி முதலில் யாரைக் கண்டார் என்பது எனக்கு தெரியாது. ஆனால், அவர் கடைசி நபரைக் கடந்தபோது இவர்கள் யார் ?என்று கேட்டார். இவர்கள் உமது சகோதரர்; உமது கணவர் ; உமது மகன் ஆவர் என்று மக்கள் கூறினர். அப்போது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எப்படி இருக்கின்றார்கள்? என்று அவர் கேட்டார். அதற்கு, அன்னார் (ஸல்) முன்னால் இருக்கின்றார்கள் என்று மக்கள் கூறினர். அந்தப் பெண்மணி சென்று விட்டார். மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்களை சென்றடைந்தார். மேலும் அவர் இறைத் தூதர் (ஸல்) அவர்களை பற்றிக் கொண்டார். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, தங்கள் மீது எனது தாயும், தந்தையும் அர்ப்பணமாகட்டும். தாங்கள் நலமுடன் இருக்கின்றீர்கள் என்றால் பின்னர் எனக்கு எந்த இழப்பைக் குறித்தும் கவலையில்லை என்று அந்தப் பெண்மணி கூறினார். (மஃஜமுல் அவ்ஸத், தொகுதி 5, பக்கம் 329 - 330, ஹதீஸ் 499, தாருல் ஃபிக்ர் பெய்ரூத்)

ஒரு கூற்றிற்கு ஏற்ப அந்தப் பெண்மணியின் பெயர் ஸுமைர் பின்த் கைஸ் ஆகும். அவர் நுஃமான் பின் அப்தே அம்ர் அவர்களின் அன்னையாக இருந்தார்.(கிதாபுல் மகாஸீ, தொகுதி 1, பக்கம் 251, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இந்த சம்பவத்தை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: கண்ணியத்திற்குரிய ஸஹாபா பெருமக்களிடத்தில் இந்த வீரத்திற்கான உதாரணங்கள் மிக அதிகமாக கிடைக்கின்றன. இப்படிப்பட்ட உதாரணங்கள் உலகியல் மக்களில் கோடிக்கணக்கான மக்களில், நூற்றுக்கணக்கான நாடுகளில் ஒன்றிரண்டு உதாரணங்களே கிடைக்கக் கூடும். ஆனால், சில ஆயிரம் ஸஹாபிகளில் நூற்றுக்கணக்கான உதாரணங்கள் கிடைக்கின்றன. மற்றவர்களிடம் கிடைத்து விடுகின்றது என்பது சரிதான். ஆனால், கோடிகளில் ஒன்றிரண்டு உதாரணங்களே கிடைக்கின்றன. ஆனால், இங்கோ ஆயிரங்களில் இருப்பவர்களில் நூற்றுக்கணக்கான உதாரணங்கள் கிடைக்கின்றன. இது ஒரு பெண்ணுடன் தொடர்பு உள்ள எத்தகைய உயர்தரமான உதாரணம் ஆகும்.

அடுத்து, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பலமுறை இதனை எடுத்துரைத்து விட்டேன். மேலும், எல்லா சபைகளிலும் எடுத்துரைப்பதற்கும், அந்த நினைவை புதுப்பிப்பதற்கும் அந்த சம்பவம் தகுதிவாய்ந்தது ஆகும். சில சம்பவங்கள் எப்படிப்பட்ட சிறப்பானவையாக இருக்கின்றன என்றால், மீண்டும் மீண்டும் எடுத்துரைத்த பிறகும் கூட அவை பழமையாக இருப்பதில்லை. இந்தப் பெண்மணியின் சம்பவமும் அப்படிப்பட்டதே ஆகும். அந்தப் பெண்மணி உஹது போர் சந்தர்ப்பத்தின்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகிவிட்டார்கள் என்ற செய்தியை மதீனாவில் செவிமடுத்தார். அந்தப் பெண்மணி மற்றப் பெண்களுடன் பதற்றத்துடன் புறப்பட்டார். மேலும், உஹது போர் மைதானத்திலிருந்து முதல் சவாரி திரும்பி வந்ததை அவர் கண்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படி இருக்கின்றார்கள்? என்று அந்த நபரிடம் அவர் விசாரித்தார். உமது கணவர் கொல்லப்பட்டு விட்டார் என்று அவர் கூறினார். அதற்கு, அந்தப் பெண்மணி நான் உம்மிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து கேட்டேன் . ஆனால் நீர் எனது கணவரைக்



EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 30 MAY 2024 Issue No.22

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

குறித்து செய்தி கூறுகின்றீர் எனக் கூறினார். அதற்கு, உமது தந்தையும் கொல்லப்பட்டு விட்டார். அவர் மீண்டும் கூறினார். ஆனால், அந்தப் பெண்மணி கூறினார்: நான் உம்மிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து கேட்கின்றேன்; ஆனால் நீர் எனது தந்தையின் நிலையை கூறுகின்றீர். அந்த நபர் கூறினார்: உமது இரண்டு சகோதரர்களும் கொல்லப்பட்டு விட்டனர். நீங்கள் எனது கேள்விக்கு விரைவாக பதில் கொடுங்கள்; நான் உம்மிடம் உறவினர்களைக் குறித்து கேட்கவில்லை; நானோ ஹஸ்ரத் நபிகள் நயாகம் (ஸல்) அவர்களைக் குறித்து கேட்கின்றேன் என்று அந்தப் பெண்மணி கூறினார். அந்த ஸஹாபியின் உள்ளமோ மனநிறைவாக இருந்தது. மேலும் அன்னார் (ஸல்) நலமுடன் இருக்கின்றார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். எனவே அவரைப் பொறுத்தவரை அந்தப் பெண்மணியின் உறவினர்களின் மரணத்தைக் குறித்து அவருக்கு தகவல் தெரிவிப்பதே மிகவும் முக்கியமான கேள்வியாக இருந்தது. ஆனால், அந்தப் பெண்மணியைப் பொறுத்தவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருப்பே எல்லாவற்றையும் விட மிகவும் நேசத்திற்குரியதாக இருந்தது. அப்போது, இறைத் தூதர் (ஸல்) அவர்களோ நலமுடன் இருக்கின்றார்கள் என்று அவர் கூறினார். இதனைக் கேட்ட அந்தப் பெண்மணி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் எனும்போது பின்னர் எவர் கொல்லப்பட்டாலும் சரியே அதனால் எனக்கு எந்த துன்பமும் இல்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த உதாரணத்திற்கு முன்னால் எழுத்தாளர்கள் ஏற்றுக் கொள்ளும் அந்த கிழவியின் உதாரணத்தில் எந்த உண்மைத்துவமும் இல்லை. அதாவது அன்னார் (ரலி) அந்த கிழவியின் உதாரணத்தைக் கொடுக்கின்றார்கள். அதாவது அவர் இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு பெண்மணி ஆவார். அவரது மகன் ஒரு போரில் கொல்லப்பட்டு விட்டார்.அந்தப் பெண்மணி செயற்கையாக சிரித்தவாறு அந்த செய்தியை செவியுற்று எதிர் நடவடிக்கையை வெளிப்படுத்தினார். இதோ பாருங்கள். பெண்கள் எவ்வளவு பெரும் பொறுமையை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்று இந்த செய்தி அந்த நாட்களில் பத்திரிகைகளில் வந்திருந்தது. இதனை அன்னார் (ரலி) குறிப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆக, அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: இந்த வெளிப்பாடு அழுத்தத்தால் மறைக்கப்பட்டதாக தெரிகின்றது. அந்தப் பெண்மணி சிரிக்கவே செய்தார். ஆனால், இந்த வெளிப்பாடு என்பது அழுத்தத்தால் மறைக்கப்பட்டது என்று தெரிகின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) கூறுகின்றார்கள்: அவர் உள்ளத்தில் அழுது கொண்டிருந்தார். அதாவது அந்த ஜெர்மன் பெண்மணி உள்ளத்தாலோ அழுது கொண்டிருந்தார்; ஆனால்,வெளிப்படையில் எந்த விஷயமும் இல்லை என்று தைரியத்தை வெளிப்படுத்தினார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆனால் அந்த பெண் ஸஹாபியாவின் சம்பவம் இப்படிப்பட்டது அல்ல. அந்த (ஜெர்மன்) பெண்மணி தம்மை கட்டுப்படுத்திக் கொண்டார்; ஆனால் உள்ளத்தால் அழுது கொண்டிருந்தார். ஆனால் அவர் அதனை வெளிப்படுத்தவில்லை.

ஆனால், அந்த பெண் ஸஹாபியாவோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்று உள்ளத்திலும் மகிழ்ச்சியாக இருந்தார்.ஆனால் அந்த (ஜெர்மன்) பெண்மணியின் உள்ளத்தில் நிச்சயமாக துக்கம் இருந்தது; ஆனால் அவர் அதனை வெளிப்படுத்த விரும்பவில்லை. அதாவது அந்த ஜெர்மன் பெண்மணியின் உள்ளத்திலோ எப்படியிருப்பினும் துக்கம் இருந்தது. ஆனால், அந்த பெண் ஸஹாபியாவின் உள்ளத்திலே எவ்வித துன்பமும் இருந்திருக்கவில்லை. இது எப்படிப்பட்ட அழகிய முன்மாதிரி என்றால், உலகின் வரலாற்றில் இதற்கு நிகரான உதாரணத்தை எவராலும் முன்வைக்க முடியாது.

مِنْهُمْ مَّنْ قَضٰى نَحْبَهٗ

என்று அத்தகைய மக்களைக் குறித்து கூறாமல் பின்னர் உலகில் வேறு எந்த சமுதாயத்தைக் குறித்த இந்த சொற்கள் கூறப்பட முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அந்தப் பெண்மணியின் சம்பவத்தை படிக்கும்போது என்னுடைய உள்ளத்தில் அவர் மீதான மரியாதையும், கண்ணியமும் நிறைந்து விடுகின்றது. மேலும், நான் அந்த பரிசுத்தப் பெண்மணியின் கரத்தைப் பற்றி என் கண்ணில் ஒத்திக் கொள்ள வேண்டும் என்று எனது உள்ளம் விரும்புகின்றது. ஏனெனில் அவர் எனது நேசருக்காக தமது அன்பில் ஒரு தன்னிகரற்ற நினைவை விட்டுச் சென்றுள்ளார் (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 20, பக்கம் 542 -543)

பின்னர் இதே நேசம் மற்றும் அன்பை எடுத்துரைத்தவாறு மற்றோர் இடத்தில் அன்னார் (ரலி) இவ்வாறு கூறுகின்றார்கள்: அந்தப் பெண்மணிக்கு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவிற்கு நேம் இருந்தது என்று பாருங்கள்! ஒருவர் பின் ஒருவர் என தந்தை, சகோதரர் மற்றும் கணவரின் மரண செய்தியை மக்கள் அவரிடம் கூறிக் கொண்டே சென்றனர். ஆனால்,ஒவ்வொரு முறையும் எனக்கு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எப்படி இருக்கின்றார்கள்? என்று கூறுங்கள் என்றே அவர் அதற்கு பதிலாக கூறிக் கொண்டிருந்தார். சுருக்கமாக, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது இந்த அளவிற்கு நேசத்தை வெளிப்படுத்திய இவர் ஒரு பெண்மணியாகவே இருந்தார். (குரூனே ஊவ்லா கி முஸ்லமான் கவாதீன் கா நமூனா, அன்வாருல் உலூம், தொகுதி 25, பக்கம் 440)

பின்னர் மற்றோரிடத்தில் இது தொடர்பாக அன்னார் (ரலி) மேலும் கூறுகின்றார்கள்:

அந்த சூழலலின் சித்திரத்தை சற்று உங்களது எண்ணங்களில் தற்போது வரையுங்கள். உங்களில் ஒவ்வொருவரும் மரணிக்கக் கூடியவரைக் கண்டிருப்பீர்கள். நெருக்கமான யாராவது ஒருவர் மரணித்திருக்கக் கூடும். ஒருவர் தனது தாயின் மரணத்தை, மற்றொருவர் தனது தந்தையின் மரணத்தை வேறாருவர் தனது சகோதரன் மற்றும் சகோதரியின் மரணத்தைக் கண்டிருப்பார். சற்று அந்தக் காட்சியை நினைத்துப் பாருங்கள்! தமது அன்பர்களின் கரங்களில் மற்றும் குடும்பங்களில் நல்ல நல்ல உணவை சமைத்தும் உண்டும, சிகிச்சை பெற்றும், தொண்டுகள் ஆற்றப்பட்டும் மரணிக்கக் கூடியவரின் நிலை எப்படிப்பட்டதாக இருக்கும்? எவ்வாறு வீட்டில் கியாமத் ஏற்படும்? மேலும் மரணிக்கக் கூடியவருக்கு தனது மரணத்தைத் தவிர வேறு எந்தவொரு பொருளைக் குறித்தும் எண்ணம் கூட வராது. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஸஹாபிகளின் உள்ளத்தில் எப்படிப்பட்ட அன்பை உருவாக்கியிருந்தார்கள் என்றால், அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர்த்து வேறு எந்தவொரு விஷயத்தைக் குறித்தும் கவலையே இருக்கவில்லை. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

**National Watch Company**
**Sales & Service**

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad